வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959 Reg. No. : P. 1632 விலை ரூ. 30/=

ஈழநாடு
Eelanadu ඊළනාඩු




Email : eelanaduweekly@gmail.com மலர் : 05 08.01.2024 திங்கட்கிழமை இதழ் : 08 பக்கங்கள் : 12

# நாகபட்டினம் - காங்கேசன்துறை படகு சேவை பெப். 01 இல் ஆரம்பம்!

## கப்பல் சேவை நிறுவனத்தின் இயக்குநர் தகவல்

- சென்னையிலிருந்து எஸ். மகாலிங்கசிவம் -

**சென்னை, ஜனவரி 08**

**பெரிதும் எதிர்பார்க்கப்பட்ட யாழ்ப்பாணத்தை தமிழகத்துடன் இணைக்கும் படகு சேவை பெப்ரவரி முதலாம் திகதி தொடங்குகிறது. 'சிவகங்கை'(சிதம்பரத்தின் திருக்குளம்) என்ற படகு தனது முதல் பயணத்தை நாகபட்டினத்தில் காலை 8 மணிக்கு தொடங்கி நான்கு மணி நேரத்தில் காங்கேசன்துறை சென்றடையும் என்று இந்தப் படகு சேவையை இயக்கும் கப்பல் நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர் சோமசுந்தரம் நிரஞ்சன் நந்தகோபன் தெரிவித்துள்ளார்.**

"150 பயணிகள் இந்தப் படகில் பயணிப்பார்கள். ஒரு வழிப் பயணத்துக்கு 80 அமெரிக்க டொலர், அதாவது 6 ஆயிரத்து 600 இந்திய ரூபாய் அல்லது 26 ஆயிரம் இலங்கை ரூபாய் கட்டணமாக வசூலிக்கப்படும். அரசு வரிகளையும் இதர கட்டணங்களையும் குறைப் பதன் மூலம் இந்தப் பயணச்சீட்டின்

11



யாழ்ப்பாணம் - தமிழகம் பயணத்தில் ஈடுபடவுள்ள படகுடன் இயக்குநர் நிரஞ்சன்



## மட்டு. - யாழ். ரயில் சேவை!

மட்டக்களப்பு,ஜன. 08

மட்டக்களப்பிலிருந்து - யாழ்ப்பாணத்துக்கு புதிய ரயில் சேவையை ஆரம்பிக்கத் திட்டமிடப் பட் டுள்ளதாக போக்குவரத்துத் துறை அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பில் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே நேற்று முன்தினம் இந்தத் தகவலை அவர் தெரிவித் தார்.

வடக்கு ரயில் மார்க்கத்துக்கு மேலதிகமாக மட்டக்களப்பு ரயில் பாதையையும் இந்த வருடம் புனரமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார். (ஐ)

### தமிழரசு தலைமை போட்டி

## சிறீதரன் எம். பிக்கு ஆதரவை அறிவித்தார் யோகேஸ்வரன்!

மட்டக்களப்பு, ஜன. 08

இலங்கை தமிழரசு கட்சியின் தலைவர் பதவிக்கான தேர்தலில் போட்டியிடும் பாராளுமன்ற உறுப்பினர் சி. சிறீதரனுக்கு தனது ஆதரவை அளிப்பதாக அந்தப் பதவிக்கு போட்டியிடும் மற்றொரு வேட்பாளரான சீ. யோகேஸ்வரன் அறிவித்துள்ளார்.



சிறீதரன் எம். பி. நேற்று முன்தினம் மட்டக்களப்பு மாவட்டத்துக்கு சென்று தமிழரசு கட்சியின் பொதுக் குழு உறுப்பினர்களை சந்தித்தார். அவரின் இந்தப் பயணத்திலேயே தமிழரசின் தலைமை பதவிக்கு போட்டியிடும் மற்றொரு வேட்பாளரான சீ. யோகேஸ்வரன் தனது ஆதரவை தெரிவித்தார்.

11

## திருமலையில் 1,414 பேர் இடர் முகாமில்!

திருமலை, ஜன. 08

திருகோணமலை மாவட்டத்தில் கடும் மழையால் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கு மற்றும் பலத்த காற்றால் பாதிக்கப்பட்ட 528 குடும்பங்களை சேர்ந்த ஆயிரத்து 414 பேர் இடர் முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

மூதூர், கிண்ணியா, சேருநுவர, வெருகல் பிரதேசங்களை சேர்ந்த பொதுமக்கள் இடர் முகாம்களில் பாதுகாப்பாக

11

## பாராளுமன்ற அமர்வை ஒத்திவைக்கத் திட்டம்!

### அறிவிப்பு இந்த வாரம் வெளியாகும்

கொழும்பு, ஜன. 08

2024ஆம் ஆண்டுக்கான முதலாவது பாராளுமன்ற அமர்வு நாளை செவ்வாய்க்கிழமை ஆரம்பமாகிறது. தொடர்ந்து நான்கு நாட்கள் பாராளுமன்ற அமர்வுகள் இடம்பெறவுள்ள நிலையில், குறுகிய காலத்துக்கு பாராளுமன்ற அமர்வுகளை ஒத்திவைக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இந்த வார இறுதிஷயில் இரு வெளிநாட்டு பயணங்களில் பங்கேற்கவுள் ளார். அவர், நாடு திரும்பியதும் பாராளுமன்றத்தை ஒத்திவைப்பதற்கான அறிவிப்பை வெளியிடவுள்ளார்.

உத்தேச ஜனாதிபதி தேர்தல் மற்றும் பாராளுமன்ற தேர்தல் தொடர்பில் அரசாங்கத்துக்குள்ளும் பிரதான எதிர்க்கட்சி உள்ளிட்ட ஏனைய அரசியல் கட்சிகள் மத்தியிலும் பரவலாக ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இவ்வாறான

11

## புதிய பயங்கரவாத சட்டம் இந்த வாரம் பாராளுமன்றில்!

### நீதி அமைச்சர் அறிவிப்பு

கொழும்பு, ஜன. 08

திருத்தப்பட்ட பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலத்தை பாராளுமன்றத்தில் இந்த வாரம் சமர்ப்பிக்கவுள்ளதாக நீதியமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இந்த ஆண்டுக்கான பாராளுமன்ற கூட்டத்தொடர் நாளை செவ்வாய்க்கிழமை ஆரம்பமாகிறது. வெள்ளிக்கிழமை வரை நடைபெறவுள்ள இந்த அமர்வில் பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலம் உட்பட 8 சட்டமூலங்கள் சமர்ப்பிக்கப்படும் என்று அமைச்சர் தெரிவித்தார்.

மேலும், பயங்கரவாத எதிர்ப்பு சட்ட மூலம் இந்த விவகாரத்துடன் தொடர்புபட்ட பலர் மற்றும் இராஜதந்திர சமூகத்தினர் முன்வைத்த கரிசனைகளுக்கு ஏற்ப திருத்தப்பட்டுள்ளது. பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ள இந்த சட்டமூலத்துக்கு எதிராக

11

## போதைக்காக 'வலிநிவாரணி'யை விற்பனை செய்த இருவர் கைது!

யாழ்ப்பாணம், ஜன. 08

போதைக்காக வலி நிவாரணி மாத்திரைகளை விற்பனை செய்த பிரபல மருந்தக ஊழியர் ஒருவர் உட்பட இருவர் கைது செய்யப்பட்டனர்.

போதைப்பொருள் ஒழிப்பு நடவடிக்கையால் போதைப்பொருள் கிடைப்பது சிக்கலாகியுள்ளது. இந்த நிலையில், போதைப் பொருளுக்குப் பதிலாக வலி நிவாரணி மாத்திரைகளை பயன்படுத்துவோரின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. இவ்வாறு சட்டவிரோதமாக வலி நிவாரணி மருந்துகளை விற்பனை செய்வோரை தேடி பொலிஸார் நடவடிக்கைகளை முன்னெடுத்தனர்.

இந்த நிலையில் நேற்று, "யாழ்ப்பாணம் மாநகர மத்தியில் வியாபார நோக்கத்துடன் ஆயிரத்து 100 போதை மாத்திரைகளுடன்

11

## அனைத்துக் கட்சிகளின் ஆதரவுடன் பொதுவேட்பாளரை நிறுத்துவோம்!

### செல்வம் அடைக்கலநாதன் எம். பி.

வவுனியா, ஜன. 08

ஜனாதிபதி தேர்தல் தொடர்பில் தமிழ்த் தேசியக் கட்சிகள் ஒற்றுமையாக ஒரு முடிவை எடுக்க வேண்டும். அனைத்து கட்சிகளும் சிவில் அமைப்புகளும் இணைந்து ஒரு பொதுவேட்பாளரை நிறுத்துவது தொடர்பாக நாம் பரிசீலிக்கவேண்டும்.

சிவில் அமைப்புகளுடனும், இலங்கை தமிழரசு கட்சியுடனும் இது தொடர்பில் பேசுவோம். கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தின் கட்சியுடனும் பேசுவதற்கு முயற்சிப்போம்."

- இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் ரெலோ அமைப்பின் தலைவருமான செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.

வவுனியாவில் உள்ள ரெலோ பணிமனையில்

11

உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை

# இப்படியும் நடக்கிறது

உலகத் தமிழர் பேரவையின் முயற்சி குறித்து கடந்த வாரம் நமது தமிழக பத்திரிகையாளர் பகவான்சிங் எழுதிய கட்டுரை தொடர்பாக இந்தப் பத்தியில் சில சந்தேகங்களை எழுதியிருந்தது வாசகர்களுக்கு நினைவிருக்கலாம்.

அந்தப் பத்திக்கு நண்பர் பகவான்சிங் நேற்றைய தனது பத்தியில் பதிலளித்திருப்பதை யும் வாசகர்கள் படித்திருப்பார்கள்.

அந்தப் பத்தியில் பகவான் தனது 'பயோ டேற்றாவை' எழுதியிருந்தார். அவரது துறைசார் அனுபவத்தையும் அவரின் எழுத்துக்களையும் பற்றி ஊர்க்குருவி எந்தக் கட்டத்திலும் எதுவும் குறிப்பிடவில்லை. ஈழத்து விடயங்களிலும் பிரச்னைகளிலும் சிக்கல்களிலும் நன்கு பரிச்சயமுள்ளவரான பகவானும் இந்த இமாலய பிரகடனம் குறித்து சரியாக புரியவில்லையா என்பதே எமது கேள்வியாக இருந்தது. பகவான் நேற்றைய தனது பத்தியின் இறுதியில் இப்படி அழைப்பு விடுத்துள்ளார்.

'இந்து மாகடல் பிராந்தியத்தில் இலங்கை ஒரு முக்கியமான புள்ளியாகத் தற்போது உருவாகியிருப்பதால், அதை மையப்படுத்திய புவிசார் அரசியல் விளையாடட்டப்படுகிறது. இச் சூழ்நிலையை பயன்படுத்திக்கொண்டு, தமிழர்கள் ஒன்று சேர்ந்து, தங்களுக்கான நிரந்தரத் தீர்வுகளை எட்ட விழைய வேண்டியது காலத்தின் கட்டாயம். ஒவ்வொருவரையும் துரோகியாகப் பார்த்து, ஒவ்வொன்றிலும் சதித் திட்டம் இருப்பதாகத் தொடர்ந்து சந்தேகித்து வந்தால், இன்னும் இன்னும் நேர விரயம்தான் ஏற்படும். வாருங்கள், குருவியாரே! சேர்ந்து பறப்போம், விண்ணை வெல்ல. இறைவன் நமக்கு அருள் புரியட்டும்.' - இதுவே பகவானின் கோரிக்கை.

இந்த துரோகி சமாச்சாரம் எங்களுக்கு உடன்பாடானதல்ல என்பது பகவானுக்கு தெரியாமல் இருக்கலாம். ஆனால், அவர் எங்களை சேர்ந்து இயங்கச் சொல்கின்ற உலகத் தமிழர் பேரவையினர்தான், தங்கள் கருத்துடன் ஒத்துப்போகாதவர்களை துரோகிகள் ஆக்கியதில் முன்னின்று உழைத்தவர்கள்.

இதையெல்லாம் இனி எழுதி வாசகர்களின் நேரத்தை வீணடிப்பது பயனற்றது.

ஆனால், இந்த ஊர்க்குருவி, தனது அன்றைய பத்தியில், போர்க் குற்ற விசாரணையையும் தமிழர்கள் ஏற்றுக்கொள்கின்ற அரசியல் தீர்வையும் வலியுறுத்தி இமாலய பிரகடனத்தில் கையெழுத்திட்ட தேரர்கள் அனைவரும் வேண்டாம் ஒருவர் மட்டுமாவது ஓர் அறிக்கை வெளியிடட்டும் அதற்காகத்தான் தாங்கள் தேசிய உரையாடலை ஆரம்பிக்கவிருக்கிறோம் என்று. அப்படி நடந்தால் நாங்களும்கூட பயணிக்கத் தயாராக இருப்பதாகத்தானே எழுதியிருந்தோம்.

அது நடந்தால் இந்தக் குருவியும் சேர்ந்து பறக்கும் என்ற பின்னர் எதற்கு மீண்டும் அழைப்பு என்பது தெரியவில்லை. அந்த அறிக்கைக்காகத்தான் குருவி பார்த்துக் கொண்டிருக்கின்றது நண்பரே.

இந்து மா கடல் பிராந்தியத்தில் இலங்கை ஒரு முக்கிய புள்ளி. அதனை மையப்படுத்தி புவிசார் அரசியல் விளையாடுகின்றது என்று நீங்களே எழுதிவிட்ட பின்னர், அந்த அரசியலை தமிழர்களுக்கு சாதகமாக மாற்றவேண்டும் என்ற உங்கள் எண்ணம் எமக்குத் தெரிந்ததுதான். ஆனால், அதனை இலங்கைக்கு சாதகமாக மாற்ற நடக்கும் திருகுதாளங்களில் நாங்கள் கூடவே பறக்கவேண்டும் என்று நீங்களும் நிச்சயம் விரும்ப மாட்டீர்கள் என்பதும் எமக்கு தெரியும் நண்பரே.

நேற்று வெளிவந்த சிங்கள பத்திரிகை ஒன்றின் செய்தி பற்றி எழுதவேண்டும் என்று நினைத்திருந்தேன். அதுபற்றி எழுதுவதற்கு முன்னதாக இதுபற்றி எழுத வேண்டிவந்துவிட்டது. இனி அதுபற்றி பார்ப்போம்.

'தமிழ் மக்களின் சார்பாக ஜனாதிபதி தேர்தலில் வேட்பாளராக 'லைக்கா' மொபைலின் உரிமையாளரும் வர்த்தகருமான அல்லிராஜா சுபாஸ்கரன் களம் இறங்க தயாராகி வருகிறாரென' ஒரு சிங்கள வார ஏடு தகவலை வெளியிட்டுள்ளது. இது பற்றித்தான் தெற்கில் எவருடன் பேசினாலும் கேட்கிறார்கள்.

இலங்கையை பூர்வீகமாகக் கொண்ட சர்வதேச வர்த்தகரும் லைக்கா மொபைலின் உரிமையாளரும் மற்றும் சுவர்ணவாஹினி ஊடக வலையமைப்பின் தலைவருமான அல்லிராஜா சுபாஷ்கரன் இலங்கையில் அரசியல் நடவடிக்கைகளை ஆரம்பிக்க அரசியல் கட்சியொன்றின் உரிமையைப் பெற்றுள்ளார் என்றும் அந்த செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது. அவர் பொறுப்பேற்றுள்ள அரசியல் கட்சி 'அருணலு மக்கள் கூட்டணி' என்றும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவர், மக்கள் யாரும் இல்லாத ஒரு தீவை சொந்தமாக வாங்கி (அது இலங்கையை விட பெரியதாக இருந்தாலும்), அதனை ஒரு நாடுபோல அபிவிருத்தி செய்து அதன் உரிமையை வைத்திருக்கப் போகிறார் என்று யாராவது எழுதினால், அந்த தீவு எங்கே இருக்கிறது என்று விசாரித்திருக்கலாம். ஆனால், அதற்காக, அவர் இலங்கையில் அதுவும் அரசியலில் ஈடுபடப்போகிறார் என்றால் நிச்சயம் அது மர்ம நாவல்களில் வருவதுபோன்ற கற்பனைக் கதைதான்.

இன்று சிங்கள இலத்திரனியல் ஊடகத்தில் கவனம் (சுவர்ண வாஹினி) செலுத்திவரும் அவர், விரைவில் சிங்களத்தில் பத்திரிகை ஒன்றையும் தொடங்குவதற்கு முயன்றுகொண்டிருப்பதும் அவர் அரசியலுக்கு வருவாரோ என்ற சந்தேகத்தை இந்த சிங்கள பத்தி எழுத்தாளர்களுக்கு ஏற்படுத்தியிருக்கலாம். அவர் அரச நிறுவனங்கள் சிலவற்றை வாங்குவதற்கு முயன்று கொண்டிருப்பதாகவும் கூறப்படுகின்றது.

அவர் அரசியலில் யார் 'வர வேண்டும்' என்று விரும்பலாமே தவிர, தான் வரவேண்டும் என்று விரும்புவதற்கு எந்த சந்தர்ப்பமும் இருப்பதாக இந்த ஊர்க்குருவி நினைக்கவில்லை.!

**- ஊர்க்குருவி.**

# தங்கம்மா அப்பாக்குட்டி நினைவாக 'சிவத்தமிழ்' விருது வழங்கி கௌரவம்!





யாழ்ப்பாணம், ஜன. 08

சிவத்தமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அம்மையாரின் 99ஆவது பிறந்தநாள் அறக்கொடை விழா நேற்று ஞாயிற்றுக்கிழமை தெல்லிப்பழை துர்க்காதேவி ஆலயத்தின் அன்னபூரணி மண்டபத்தில் நடைபெற்றது.

ஆலயத்தின் தலைவர் கலாநிதி ஆறு. திருமுருகன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், ஐந்து பெருந்தகைகள் 'சிவத்தமிழ்' விருது வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

பேராசிரியர் சி. சிவலிங்கராஜா, மருத்துவர் சி. அருளானந்தம், இளைப்பாறிய விரிவுரையாளர் திருமதி நாச்சியார் செல்வநாயகம், நாதஸ்வர வித்துவான் இ. கேதீஸ்வரன், இளைப்பாறிய அதிபர் மு. அருணாசலம் ஆகியோர் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டனர். (ஐ)




# அனுமதி பத்திரத்துக்கு முரணாக மணல் ஏற்றிய 5 சாரதிகள் கைது!

கிளிநொச்சி, ஜன. 08

தருமபுரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கல்லாறு மற்றும் மயில்வாகரபுரம் பகுதியில் அனுமதி பத்திரத்துக்கு முரணான வகையில் மணல் ஏற்றிய குற்றச்சாட்டில் 5 டிப்பர் வாகனங்களின் சாரதிகள் கைது செய்யப்பட்டனர்.

தருமபுரம் பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற தகவலுக்கு அமைய முன்னெடுக்கப்பட்ட வீதிச் சோதனையில் இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

கைது செய்யப்பட்ட சாரதிகள் பொலிஸ் விசாரணைகளின் பின்பு பிணையில் விடுவிக்கப்பட்டனர் என்று தருமபுரம் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி டி. எம். சதுரங்க தெரிவித்துள்ளார். (ஐ)

# இஞ்சியின் விலை அதிகரிப்பு

கொழும்பு, ஜன. 08

இஞ்சியின் விலையில் பெரும் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது. ஒரு கிலோகிராம் இஞ்சியின் விலை 2 ஆயிரம் ரூபாயாக அதிகரித்துள்ளது.

அத்துடன், ஒரு கிலோ வேர்கொம்பின் விலை 3 ஆயிரம் ரூபாயை கடந்துள்ளது என்று வியாபாரிகள் தெரிவித்தனர்.

சந்தையில் இஞ்சிக்கான கேள்வி அதிகரித்துள்ள நிலையில் விலையும் உயர்ந்துள்ளது. (ஐ)

# போதைப்பொருள் ஒழிப்பு நடவடிக்கையில் பொலிஸ் போக்குவரத்து பிரிவும் இணைவு!

கொழும்பு, ஜன. 08

யுக்திய நடவடிக்கையில் பொலிஸ் போக்குவரத்து பிரிவும் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளது. இதற்கமைய நாடளாவிய ரீதியில் பல இடங்களிலும் சோதனை சாவடிகளை அமைத்து, வாகனங்களை சோதிப்பதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவுள்ளன என்று பொலிஸ் போக்குவரத்து நிர்வாகம் மற்றும் வீதி பாதுகாப்பு பிரிவின் பணிப்பாளர் பிரதி பொலிஸ்மா அதிபர் இந்திக ஹப்புகொட தெரிவித்தார்.

விசேட அதிரடிப்படையினர், மோப்ப நாய் பிரிவு, அதிவேக வீதி போக்குவரத்து பிரிவு, கொழும்பு போக்குவரத்து தலைமையகம் உள்ளிட்டவை இந்த நடவடிக்கைகளில் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளன. அரச, தனியார் பேருந்துகள் உட்பட சகல வாகனங்களும் சோதனைக்கு உட்படுத்தப்படவுள்ளன.

கொழும்பிலிருந்து ஏனைய மாகாணங்களுக்கு கொண்டு செல்லப்படும் போதைப் பொருட்களை கைப்பற்றுவதே இதன் நோக்கமாகும்.

சோதனைக்கு உட்படுத்தப்படும் வாகனங்களுக்கு விசேட ஸ்ரிக்கர்கள் ஒட்டப்படும். ஏனைய சோதனை சாவடிகளிலுள்ள பொலிஸார் இலகுவில் இனங்காண்பதற்காக இந்த ஸ்ரிக்கர்கள் ஒட்டப்படவுள்ளன.

எவ்வாறிருப்பினும் கொழும்பில் சோதனைக்கு உட்படுத்தப்பட்ட ஆனால், சந்தேகத்துக்கிடமான வாகனங்கள் காணப்பட்டால் அவற்றை மீண்டும் சோதனைக்கு உட்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும்.

ஒட்டப்படும் ஸ்ரிக்கர்களில் பொலிஸ் பிரிவுகள் மற்றும் தினம் என்பன குறிப்பிடப்படும். எனவே, வேறொரு பொலிஸ் பிரிவுக்குள் ஏற்கனவே சோதனைக்கு உட்படுத்தப்பட்ட வாகனம் பயணித்தால், அவை மீண்டும் சோதனைக்கு உட்படுத்தப்படும் - என்றார். (ஐ)

ஈழநாடு
Eelanadu
08.01.2024 திங்கட்கிழமை
சோபகிருது வருடம், மார்கழி 23

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# ரணிலின் வடக்கு சந்திப்புகள் உணர்த்துவது!

ரணில் விக்கிரமசிங்க, வடக்கு வருகையின்போது பல்வேறு தரப்பினரை சந்தித்திருக்கின்றார் - பல்வேறு விடயங்களை பேசியிருக்கின்றார் - பல விடயங்களை செய்யவுள்ளார் என்றும் கூறியிருக்கின்றார். ரணிலின் வார்த்தைகளை ஆழமாக நோக்கினால் அனைத்திலும் - அவரின் அடுத்த கட்டத் தேர்தல் நகர்வுகளே மேலோங்கியிருக்கின்றன. ஆனால், அவரின் சந்திப்புகளை உற்றுநோக்கும்போது ஒரு விடயம் வெள்ளிடைமலை. அதாவது, தமிழ்த் தேசிய நிலைப்பாட்டில் நின்று விடயங்களை நோக்குபவர்களை அவர் சந்திக்கவில்லை. அவ்வாறானவர்களை திட்டமிட்டு தவிர்த்தாரா அல்லது சந்திப்புகளை ஏற்பாடு செய்தவர்கள் தங்களுக்கு சார்பானவர்களை மட்டுமே அழைத்தார்களா அல்லது  டக்ளஸ் தேவானந்தா தலைமையிலான ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி முன்னிலையில் நின்றதால் தமிழ்த் தேசிய அரசியலை பிரதிநிதித்துவம் செய்பவர்கள் தங்களைத் தூரமாக நிறுத்திக் கொண்டனரா?

இவ்வாறான கேள்விகளுக்கு அப்பால் ரணில் விக்கிரமசிங்க உண்மையிலேயே தமிழ் மக்களின் வாக்குகளை எதிர்பார்த்தால் அவர் தமிழ் மக்களின் பெருபான்மையினரை பிரதிநிதித்துவப்படுத்தும் தரப்புகளின் கரிசனைகளை கவனத்தில் கொள்ள வேண்டும் ஏனெனில், அரசாங்கத்துடன் இணைந்திருக்கும் தரப்புகளின் கருத்துகளுக்கு மட்டும் செவிசாய்த்தால் தமிழ் மக்களின் நாடித் துடிப்பை அறிய முடியாது. ஒருவேளை தமிழ்த் தேசிய கட்சிகள் எதைக் கூறினாலும் தமிழ் மக்கள் தனக்குத்தான் வாக்களிப்பார்கள் என்று எண்ணுகின்றாரா?

ஏனெனில், வடக்கு வருகையின்போது, ரணில் விக்கிரமசிங்க தமிழ்த் தேசிய அரசியலை பிரதிநிதித்துவம் செய்யும் தரப்புகளுக்கு முக்கியத்துவம் வழங்கவில்லை. ஜனாதிபதித் தேர்தலை இலக்கு வைத்து அவர் செயல்படுவது உண்மையென்றால் அனைத்துத் தரப்பினரையும் அணுகியிருக்க வேண்டும். ஆனால், அதனை அவர் செய்யவில்லை. உண்மையில்,  ரணிலின் அணுகுமுறையானது தமிழ் மக்கள் தொடர்பில் அவர் கொண்டிருக்கும் பார்வை தொடர்பில் சந்தேகத்தை ஏற்படுத்துகின்றது.

ரணில் விக்கிரமசிங்க வடக்கு - கிழக்கில் விடயங்களை அணுகும்போது அரசாங்கத்துடன் இணைந்திருக்கும் கட்சிகளின் ஊடாக விடயங்களை அணுகுவது தவறானது. இதற்குப் பதிலாக, அவர் வடக்கு - கிழக்கு விடயங்களை அணுகுவதற்கான பிரத்தியேக இணைப்பாளர்களை நியமிக்க வேண்டும். பல்வேறு தரப்புகளையும் சந்தித்து மக்களின் பிரச்னைகளை அறிய முற்பட வேண்டும். நல்லிணக்கம் தொடர்பில் ரணில் உண்மையிலேயே அக்கறை கொண்டிருப்பது உண்மையாயின் இதனை அவர் செய்ய வேண்டும். அரசாங்கத்துடன் இணைந்திருக்கும் தமிழ்க் கட்சிகள் பல்வேறு அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொள்வதாகக் கூறியபோதிலும்கூட - ஏன் தமிழ் மக்கள் பெரும்பான்மையாக அவர்களை ஆதரிக்கவில்லை? ரணில், இந்தக் கேள்விக்குப் பதிலைத் தேட முற்சிக்க வேண்டும்.

அடிப்படையில் ரணிலின் வடக்கு வருகையானது தமிழ் மக்களின் நாடித்துடிப்பை அறியும் சந்திப்பாக இருக்கவில்லை - வெறுமனே, அரசாங்கக் கட்சிகளின் ஏற்பாட்டில் அரச தலைவர் ஒருவரின் சந்திப்பாகவே அமைந்திருக்கின்றது. ஆனால், 2015இற்கு பின்னரான காலப்பகுதியில் வடக்குக்கு வந்த ரணில் இவ்வாறு வரவில்லை. அப்போது அவருடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர்கள் இருந்தனர். ஆனால், இப்போது டக்ளஸ் தேவானந்தாவும் அங்கஜன் இராமநாதனும் மட்டுமே நிற்கின்றனர்.

# வருடத்தின் முதல் 4 நாட்களில் மட்டும் 25,000 சுற்றுலாவிகள் இலங்கை வருகை

*கொழும்பு, ஜன. 08*

*இந்த வருடத்தின் முதல் நான்கு நாட்களில் மாத்திரம் 25 ஆயிரத்துக்கும் அதிகமான சுற்றுலா பயணிகள் இலங்கைக்கு வருகை தந்துள்ளனர்.*

*கடந்த ஜனவரி முதலாம் திகதி முதல் 4ஆம் திகதி வரையில் மாத்திரம் 25 ஆயிரத்து 619 சுற்றுலா பயணிகள் இலங்கைக்கு வருகை தந்துள்ளனர் என்று சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.*

*அதிக எண்ணிக்கையிலான சுற்றுலா பயணிகளாக 5 ஆயிரத்து 60 பேர் ரஷ்யாவிலிருந்து வந்துள்ளனர். அதே நேரத்தில் 3 ஆயிரத்து 333 சுற்றுலா பயணிகள் இந்தியாவிலிருந்து வந்துள்ளனர்.*

*மேலும் ஜேர்மனி, பிரித்தானியா, அவுஸ்திரேலியா, சீனா, பிரான்ஸ், நெதர்லாந்து மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகளிலிருந்தும் பெரும் எண்ணிக்கையான சுற்றுலா பயணிகள் வருகை தந்துள்ளனர் என்று இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.*

*(ஐ)*

### அமரகீர்த்தி எம். பி. கொலை

# 41 சந்தேகநபர்களின் பிணையை இரத்து செய்யக் கோரி வழக்கு!

*கொழும்பு, ஜன. 08*

*முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் அமரகீர்த்தி அத்துகோரள மற்றும் அவரது மெய்ப்பாதுகாவலர் ஆகியோர் கொலை செய்யப்பட்ட வழக்கில் குற்றஞ் சாட்டப்பட்டுள்ள 41 பேருக்கு மேல் நீதிமன்றம் வழங்கிய பிணையை இரத்துச் செய்யுமாறு கோரி சட்டமா அதிபர் உயர் நீதிமன்றில் மனு ஒன்றை தாக்கல் செய்துள்ளார்.*

*குற்றஞ்சாட்டப்பட்டவர்களை பிணையில் விடுவிப்பது நியாயமான விசாரணைக்கு இடையூறாக இருக்கும் என்று சட்டமா அதிபர் தமது வாதத்தை முன்வைத்துள்ளார்*

*மேல் நீதிமன்ற நீதிபதிகள் ஆயம் வழங்கிய பிணை உத்தரவை உச்சநீதிமன்றம் இரத்து செய்ய வேண்டும். வழக்கு விசாரணை முடியும் வரை சந்தேகநபர்கள் விளக்கமறியலில் வைக்கப்படவேண்டும் என்றும் சட்டமா அதிபர் கோரியுள்ளார். (ஐ)*

# தேர்தல் நடத்தினால் ரணிலை நாம் வீட்டுக்கு அனுப்புவோம்!

### ஜே. வி. பி. தலைவர் அநுரகுமார

*கொழும்பு, ஜன. 08*

*ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை வீட்டுக்கு அனுப்புவோம் என ஜே. வி. பி.யின் தலைவர் அநுர குமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.*

*கம்பஹா பிரதேசத்தில் நடைபெற்ற கூட்டமொன்றில் அவர் இந்த விடயத்தை தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு,*

*அடுத்து நடக்கப் போவது ஜனாதிபதி அல்லது பொதுத் தேர்தல் ஆகிய இரண்டில் எதுவாக இருந்தாலும் அதில் வெற்றியீட்டுவோம். ஜனாதிபதி தேர்தல் முன்கூட்டி நடத்தப்பட்டால் ரணில் நிச்சயமாக தோல்வி அடைவார்.*

*பொதுத் தேர்தல் நடத்தப்பட்டால் தேசிய மக்கள் சக்தி அதில் வெற்றியீட்டி, ஜனாதிபதித் தேர்தலை நடத்த நடவடிக்கை எடுக்கப்படும்.*

*தேசிய மக்கள் சக்திக்கு மக்கள் மத்தியில் காணப்படும் ஆதரவு காரணமாக எந்த தேர்தலை முன்கூட்டி நடத்துவது என்பதில் அரசாங்கத்துக்குப் பெரும் நெருக்கடி ஏற்பட்டுள்ளது. தேசிய மக்கள் சக்திக்கு சாதகமற்ற தேர்தல் ஒன்றை நடத்துவதற்கே அரசாங்கம் விரும்புகிறது - என்றார்.*

*(ஐ)*

# சங்குவேலியில் நேற்று மோ. சைக்கிள் எரிப்பு!

*யாழ்ப்பாணம், ஜன. 08*


*நள்ளிரவு வேளை வீடு ஒன்றுக்குள் புகுந்த குழு என்று வீட்டின் யன்னல் கண்ணாடிகளை உடைத்து சேதப்படுத்தியதுடன், விலை உயர்ந்த மோட்டார் சைக்கிள் ஒன்றுக்கும் தீ வைத்துவிட்டு தப்பிச் சென்றுள்ளது.*

*மானிப்பாய் பொலிஸ் பிரிவின் சங்குவேலி பகுதியில் ஞாயிற்றுக்கிழமை நள்ளிரவு வேளை இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.*

*சம்பவம் தொடர்பில் மானிப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது. பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.*

*(ஐ)*

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'






**மேடம்**
மற்றவர்களை நம்பி எந்த பொறுப்புகளையும் ஒப்படைக்க வேண்டாம். வியாபாரத்தில் வாடிக்கையாளர்களிடம் கனிவாகப் பழகுங்கள். உத்தியோகத்தில் அவசர முடிவுகள் எடுக்க வேண்டாம்.

**இடபம்**
உங்களுடைய பலம் பலவீனத்தை உணர்வீர்கள். கல்யாணப்பேச்சு வார்த்தை வெற்றியடையும். பழைய நண்பர்கள் தேடி வருவார்கள். வியாபாரத்தில் எதிர்பாராத தனலாபம் உண்டு.

**மிதுனம்**
குடும்பத்தில் உங்கள் வார்த்தைக்கு மதிப்பு கூடும். வழக்கில் நல்ல தீர்ப்பு வரும். வியாபாரத்தில் பழைய சரக்குகள் விற்கும். உத்தியோகத்தில் உங்களின் புதிய முயற்சிகளை அதிகாரி பாராட்டுவார்.

**கடகம்**
புதிய முயற்சிகள் யாவும் வெற்றியடையும். பிள்ளைகளின் உயர்கல்வி உத்யோகம் குறித்து யோசிப்பீர்கள். உத்தியோகத்தில் சூட்சுமங்களை உணர்வீர்கள். கனவு நனவாகும் நாள்.

**சிம்மம்**
எதிர்பார்த்தவைகளில் சில தள்ளிப் போனாலும் எதிர்பாராத ஒரு வேலை முடியும். தாயாருடன் கருத்து மோதல்கள் வந்து செல்லும். வெளிவட்டாரத்தில் புது அனுபவம் உண்டாகும்.

**கன்னி**
துணிச்சலாக சில முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள். உடன்பிறந்தவர்கள் உங்கள் வேலைகளைப் பகிர்ந்து கொள்வார்கள். அரசால் ஆதாயம் உண்டு. பிரபலங்களின் நட்பு கிடைக்கும்.

**துலாம்**
கடந்த இரண்டு நாட்களாக இருந்த அலைச்சல் டென்ஷன் கோபம் யாவும் நீங்கி குடும்பத்தில் மகிழ்ச்சி அதிகரிக்கும். புதியவர்கள் நண்பர்களாவார்கள். நவீன சாதனங்கள் வாங்குவீர்கள்.

**விருட்சிகம்**
தர்ம சங்கடமான சூழ்நிலைகளில் இருந்து தவிப்பீர்கள். வியாபாரத்தில் வேலையாட்களின் ஒத்துழைப்பின்மையால் லாபம் குறையும். உத்தியோகத்தில் அதிகாரிகளுடன் அளவாக பழகுங்கள்.

**தனுசு**
விடாப்பிடியாக செயல்பட்டு சில வேலைகளை முடிப்பீர்கள் உடல் அசதி சோர்வு வந்து நீங்கும். பழைய கடனைத் தீர்க்க முயற்சிகள் செய்வீர்கள். மேலதிகாரியுடன் மோதல்கள் வேண்டாமே.

**மகரம்**
எதிர்பார்ப்புகள் நிறைவேறும். பெற்றோர் பக்கபலமாக இருப்பார்கள். விலை உயர்ந்தப் பொருட்கள் வாங்குவீர் கள். வியாபாரத்தில் பழைய வாடிக்கையாளர்கள் தேடி வருவார்கள்.

**கும்பம்**
அனுபவப் பூர்வமாகவும் அறிவுப் பூர்வமாகவும் பேசி எல்லோரையும் கவர்வீர்கள். குடும்பத்தில் உள்ள பிரச்னைகள் நீங்கும். பிள்ளைகள் பொறுப்புணர்ந்து செயல்படுவார்கள்.

**மீனம்**
கணவன்-மனைவிக்குள் இருந்த மனப்போர் நீங்கும் மகிழ்ச்சி அதிகரிக்கும். பணப்புழக்கம் கணிசமாக உயரும். புதிய வாகனங்களை வாங்குவீர்கள். பாதியில் நின்ற வேலைகள் முடியும்.



# விஜயகாந்த் நினைவாக மதுரையில் சகல கட்சியினரும் அமைதி பேரணி!

*மதுரை, ஜன. 08*

தே. மு. தி. க. நிறுவுநர் தலைவர் விஜயகாந்த் மறைவையொட்டி மதுரையில் நேற்று நடந்த அமைதிப் பேரணியில் அனைத்துக் கட்சியினரும் பங்கேற்றனர்.

தே. மு. தி. க. கட்சியின் நிறுவுநர் தலைவரும், மற்றும் முன்னாள் எதிர்க்கட்சித் தலைவருமான நடிகர் விஜய காந்த் கடந்த டிசெம்பர் 28ஆம் திகதி உடல் நலக்குறைவால் காலமானார். அவரது மறைவையொட்டி நேற்று மதுரை தே. மு. தி. க. ஒருங்கிணைந்த மாவட்டம் சார்பில் அமைதிப் பேரணி நடைபெறறது.

மதுரை பெரியார் பேருந்து நிலையம் அருகே யூ.சி.பள்ளியிலிருந்து மேலமாசி வீதி வடக்கு மாசி வீதி வரை அமைதிப் பேரணியாக சென்று அங்கு வைக்கப்பட்டிருந்த விஜயகாந்த் உருவப் படத்துக்கு அனைத்து கட்சியினரும் மலரஞ்சலி செலுத்தினர்.

இதில் தி. மு. க. , அ. தி. மு. க., காங்கிரஸ், அ. ம. மு. க., விடுதலை சிறுத்தைகள் கட்சி, தென்னிந்திய போரர்வர்ட் பிளொக் , கம்யூனிஸ்ட் கட்சி, மருது சேனை அமைப்பு, வணிகர்கர்கள் சங்கம் மற்றும் அனைத்து கட்சிகளும் கலந்து கொண்டனர். (ஐ)

# இந்திய பொருளாதாரத்தில் தமிழகத்துக்கு முக்கிய பங்கு

## முதல்வர் ஸ்டாலின் பெருமிதம்

*சென்னை, ஜன. 08*

இந்திய பொருளாதாரத்தை வடிவமைப்பதில் தமிழகம் முக்கிய பங்கு வகிக்கும் என்று முதலமைச்சர் மு. க. ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

நேற்றைய தினம் உலக முதலீட்டாளர் மாநாட்டை சென்னையில் தொடக்கி வைத்து உரையாற்றிய முதலமைச்சர் ஸ்டாலின் தெரிவித்தவை வருமாறு,

இன்று சென்னையில் பெய்யும் மழை போல முதலீடும் மழையாக பெய்யும் என நம்புகிறேன். முதலமைச்சராக மட்டுமின்றி சகோதரனாக உங்களை வரவேற்கிறேன். தனித்த தொழில்வளம் கொண்ட மாநிலம் தமிழ்நாடு.

பழங்காலத்திலேயே கடல் தாண்டி வணிகம் செய்தவர்கள் தமிழர்கள். திரை கடல் ஓடியும் திரவியம் தேடு என்ற பழ



மொழி தமிழில் உண்டு. கல்விக்கு முக்கியத்துவம் அளிக்கும் மாநிலம், அதனால் சிறந்த தொழிலாளர்கள் தமிழகத்தில் உண்டு.

எங்கள் அழைப்பை ஏற்று வந்துள்ள அனைத்து தொழில் நிறுவனங்களுக்கும் நன்றி. வெளிநாட்டு தூதரக அதிகாரிகள், தொழில் கூட்டமைப்பினருக்கு நன்றி.

எனது அழைப்பை ஏற்று வந்துள்ள மத்திய அமைச்சர் பியூஸ் கோயலுக்கு நன்றி. வங்கிப் பணியாளராக இருந்து நிதி, வர்த்தகத்துறையில் சிறந்து விளங்குபவர் பியூஸ் கோயல். அமெரிக்க உள்ளிட்ட 9 நாடுகள் எங்களுடன் பங்குதாரராக உள்ளன.

தொழில் வளர்ச்சிக்கு இந்த மாநாடு வழிவகுக்கும். பல சாதனைகளை மிஞ்சக்கூடிய மாநாடாக இது இருக்கும். இந்திய பொருளாதாரத்தை வடிவமைப்பதில் தமிழகம் முக்கிய பங்கு வகிக்கும். 2030க்குள் ஒரு இலட்சம் கோடி ரூபாய் பொருளாதாரத்தை தமிழகம் எட்டும்.

பொருளாதார வளர்ச்சிக்கு சட்டம் ஒழுங்கு பேணப்பட்டு, அமைதி நிலவ வேண்டும். பொருளாதார வளர்ச்சிக்கு உள்கட்டமைப்பு சிறப்பாக இருக்க வேண்டும். 2021இல் பொறுப்பேற்ற பிறகு இந்த வசதிகளை சிறப்பாக மேம்படுத்தி வருகிறோம் - என்றார்.

# கொடநாடு கொலை, கொள்ளை வழக்கு பெப். 9இற்கு ஒத்திவைப்பு

*சென்னை, ஜன. 08*

கொடநாடு கொலை, கொள்ளை வழக்கு விசாரணை எதிர்வரும் பெப்ரவரி 9ஆம் திகதி ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

நீலகிரி மாவட்டம் கோடநாடு எஸ்டேட்டில் 2017இல் காவலாளி ஓம்பகதூர் கொலை செய்யப்பட்டு, அங்கிருந்த பொருட்கள் கொள்ளையடிக்கப்பட்டன. இது தொடர்பாக 9 பேர் கைது செய்யப்பட்டனர்.

இந்த வழக்கு விசாரணை நீலகிரி மாவட்ட முதன்மை நீதிமன்றத்தில் நடைபெற்று வருகிறது. இந்நிலையில், இந்த வழக்கு மாவட்ட நீதிமன்றத்தில் நேற்றுமுன்தினம் விசார




ணைக்கு வந்தது.

வழக்கில் குற்றவாளிகளாக சேர்க்கப்பட்டுள்ள மூவரின் 8 கைபேசி உரையாடல்களைக் கொண்டு தயாரிக்கப்பட்ட 8,000பக்கம் கொண்ட அறிக்கையைப் படிக்கவும், மேலும் பலரிடம் விசாரணை நடத்தவும் காலஅவகாசம் தேவைப்படுகிறது. எனவே, கூடுதல் அவகாசம் தருமாறு பொலிஸார் கேட்டனர்.

இதையடுத்து, இந்த வழக்கை வரும் பெப்ரவரி 9ஆம் திகதிக்கு நீதிபதி ஒத்தி வைத்தார். (ஐ)



# தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்ய வேண்டும்!

## குரலற்றோரின் குரல் அமைப்பு ஜனாதிபதிக்கு கோரிக்கை மனு

யாழ்ப்பாணம், ஜன. 08

நீண்டகாலம் தடுத்து வைக்கப்பட்டுள்ள 12 தமிழ் அரசியல் கைதிகளை எதிர்வரும் சுதந்திர தினத்துக்கு முன்னர் விடுதலை செய்ய வேண்டும் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரம சிங்கவிடம் கோரிக்கை மனு அளிக்கப்பட்டது.

குரலற்றவர்களின் குரல் அமைப்பு தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்யுமாறு பல தரப்பினரிடமும் கையொப்பங்களை பெற்றது. மதத் தலைவர்கள், சிவில் சமூக செயற்பாட்டாளர்கள், பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் எனப் பலரும் ஒப்பமிட்டிருந்த மனுவே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் கையளிக்கப்பட்டது.

நேற்றுமுன்தினம் இந்த மனுவை குரலற்றவர்களின் குரல் அமைப்பின் ஒருங்கிணைப்பாளர் கோமகன் யாழ். மாவட்ட செயலகத்தில் வைத்து ஜனாதிபதியிடம் வழங்கினர்.

# வவுனியாவில் அதிக பனிமூட்டம்! வாகன சாரதிகள் பெரும் சிரமம்!!



வவுனியா, ஜன. 08

வவுனியாவில் நேற்று அதிகளவான பனிமூட்டம் காணப்பட்ட நிலையில் சாரதிகள் வாகனங்களை செலுத்துவதில் பெரும் சிரமங்களை சந்தித்திருந்தனர்.

வவுனியா நகர்ப்புறம் உட்பட அனைத்து இடங்களிலும் காலை 7.30 மணிவரை அதிகளவான பனி மூட்டம் காணப்பட்டது.

இதன் காரணமாக வேலைக்குச் செல்வோர், வாகன சாரதிகள் எனப் பலரும் சிரமங்களை எதிர்கொண்டிருந்தனர்.

ஏ-9 வீதி உட்பட வவுனியாவில் வீதியால் சென்ற வாகனங்கள் காலை 7.30 மணிவரை மின்விளக்குகளை ஒளிரவிட்டபடியே பயணித்தன. (ஐ)

# விவசாயத்தை நவீனப்படுத்தி தன்னிறைவை உருவாக்குவோம்!

## ஐ. தே. கவினரிடையே ஜனாதிபதி தெரிவிப்பு



படம் :ஐ.சிவசாந்தன்

யாழ்ப்பாணம், ஜன. 08

**விவசாயத்துறையை நவீனமயப்படுத்தி நவீன முறையிலான விவசாய முறைகளை விரிவுபடுத்துவதன் மூலம் தன்னிறைவு பொருளாதாரம் ஒன்றை உருவாக்குவதே எமது நோக்கம்.**

**யாழ்.மாவட்ட ஐக்கிய தேசிய கட்சியின் பிரதிநிதிகளை நேற்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சந்தித்தபோதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.**

யாழ். மாவட்ட ஐக்கிய தேசிய கட்சியின் அமைப்பாளரும் முன்னாள் அமைச்சருமான திருமதி விஜயகலா மகேஸ்வரனின் அழைப்பின் பேரில் யாழ்ப்பாணம் நகரில் நேற்று கூட்டம் ஒன்று நடைபெற்றது. ஐக்கிய தேசியக் கட்சியை சேர்ந்த முன்னாள் பிரதேச சபை உறுப்பினர்கள், கட்சியின் ஆதரவாளர்கள் எனப் பலர் இதில் கலந்து கொண்டனர்.

இங்கு உரையாற்றிய ஜனாதிபதி, தற்போது நம் அனைவருக்கும் உள்ள மிகப் பெரிய சவால் பொருளாதார மேம்பாட்டை ஏற்படுத்துவது. அத்தோடு வட பகுதியில் உள்ள வளங்களை பயன்படுத்தி பொருளாதாரத்தை எவ்வாறு மேம்படுத்தலாம் என்பது தொடர்பில் ஆராய்ந்து வருகின்றோம்.

குறிப்பாக வடக்கில் நான் வருகை தரும் போதெல்லாம் பிரச்னை என்ன என்று கேட்கும்போது காணாமல் ஆக்கப்பட்டோர் பிரச்னை, அரசியல் தீர்வு என ஒரு சில பிரச்னைகளுடன் மாத்திரம் என்னிடம் அணுகுவார்கள். அதனை விடுத்து நாம் முன்னோக்கி செல்வதற்கு என்ன செய்யலாம் என்பது பற்றித்தான் நான் ஆராய்கின்றேன்.

விவசாயத்துறையை நவீன மயப்படுத்தி நவீன முறையிலான விவசாய முறைகளை விரிவுபடுத்துவதன் மூலம் தன்னிறைவு பொருளாதாரம் ஒன்றை உருவாக்குவதே எமது நோக்கம். வெளிநாடுகளில் எவ்வாறு மின்சாரத்தை இயற்கை வளத்தை பயன்படுத்தி உற்பத்தி செய்கின்றார்கள் அல்லது விவசாய உற்பத்திகளை எவ்வாறு நவீன முறையில் உற்பத்தி செய்கின்றார்கள் என்பவற்றை நாங்கள் ஆராய்ந்து வருகின்றோம். எதிர்வரும் காலங்களில் நாட்டை முன்னோக்கி கொண்டு செல்வதற்கு பொருளாதாரத்தை மேம்படுத்துவது அவசியமானது. இதற்கு அனைத்து மக்களும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் - என்றார். (ஐ-03)

# நான் மன்னித்து விட்டேன்! அரசியல் கைதியின் விடுதலைக்கு விரைவில் நடவடிக்கை எடுப்பேன்!

## அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா உறுதி

யாழ்ப்பாணம், ஜன. 08

தன்மீதான கொலை முயற்சிக்காக மரண தண்டனை விதிக்கப்பட்ட பெண்ணை தான் எப்போதோ மன்னித்து விட்டேன் என்றும் அவரின் விடுதலைக்கு சட்ட மா அதிபருடன் பேசி விரைவில் நடவடிக்கை எடுப்பதாகவும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா உறுதியளித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தை சேர்ந்த முன்பள்ளி ஆசிரியையும் இரு பிள்ளைகளின் தாயருமான செ. சத்தியலீலா என்பவர் கடந்த 2004ஆம் ஆண்டு முதல் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

அவசரகால சட்டவிதியின் கீழ் சந்தேகத்தின் பெயரில் கைது செய்யப்பட்டு 14 ஆண்டுகளாக விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த அவரை கொழும்பு மேல்நீதிமன்றம் இவருக்கு '15 வருடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட, இரண்டு வருட சிறைதண்டனையுடன் சேர்த்து 25 ஆயிரம் ரூபாய் தண்டப்பணம் செலுத்த வேண்டும்' என்ற நிபந்தனையுடன் 2018 ஆம் ஆண்டு விடுதலை செய்தது.

எனினும் மேல் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பில் திருப்தியடையாத சட்டமா அதிபர் திணைக்களம் அந்த தீர்ப்பை ஆட்சேபித்து மேல்முறையீட்டு நீதிமன்றில் முறையீடு செய்திருந்தது. அந்த வகையில், மேன்முறையீட்டு நீதிமன்றம் அரசியல் கைதியான சத்தியலீலாவுக்கு 2023 இல் மரண தண்டனைத் தீர்ப்பளித்தது.

இந்நிலையில் அவர், மேல்முறையீட்டு நீதிமன்றம் தனக்கு அளித்த தண்டனை தீர்ப்பை மீள்பரிசீலனைக்கு உட்படுத்தி வழக்கிலிருந்து விடுவிக்குமாறு உயர் நீதிமன்றில் மீண்டும் மனுத்தாக்கல் செய்துள்ளார்.

இந்த நிலையில், சத்தியலீலா தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலைக்காக போராடி வரும் 'குரலற்றவர்களின் குரல்' அமைப்புக்கு ஊடாக ஜனாதிபதிக்கு ஒரு கருணை மனுவை அனுப்பி வைத்திருந்தார்.

அதில் அவர், "என்னைப் பொறுத்த மட்டில் 14வருடங்களாக பட்ட துன்ப, துயரங்களுக்கு பின்னரும் ஒரு மரண தண்டனை கைதியாக மீண்டும் சிறைக்குச் செல்வதை இந்த ஜென்மத்தில் நினைத்துப் பார்க்கவே முடியாது. அதை விட உயிரை மாய்த்துக் கொள்வதே மேல்.

எனவே, ஜனாதிபதி பிள்ளைகளையும், பெற்றோரையும் பிரிந்து14 ஆண்டு காலம் சிறையில் வாடி விடுதலையான பின்பும் மரணதண்டனைத் தீர்ப்புக்கு ஆளாகியுள்ள எனக்கு கருணை அடிப்படையில் பொது மன்னிப்பு வழங்கி எனது இயல்பு வாழ்வுக்கு வழிவகுக்க வேண்டும்" என கோரிக்கை விடுத்திருந்தார்.

இந்த கருணை மனு நேற்று முன்தினம் ஜனாதிபதியிடம் வழங்கப்பட்டது. அந்தச் சமயம் ஜனாதிபதியுடன் அருகிலிருந்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா,

"அந்தப் பெண்மணியை எப்போதோ நான் மன்னித்துவிட்டேன். ஆகையால், இந்த விடயம் சம்பந்தமாக நான், சட்டமா அதிபருடன் கலந்துரையாடி அவரது துரிதமான விடுதலைக்கு நடவடிக்கை எடுப்பேன் " என்ற உறுதி வழங்கினார். (ஐ-2)

# வடக்கின் சுகாதாரம், கல்விக்கு முன்னுரிமை அடிப்படையில் நிதி!

## உறுதியளித்தார் ஜனாதிபதி

**யாழ்ப்பாணம், ஜன. 08**

**முன்னுரிமை அடிப்படையில் வடக்கின் சுகாதாரம் மற்றும் கல்விப் பிரச்னைகளைத் தீர்க்க உடனடியாக நிதி வழங்கப்படும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.**

அதன் கீழ் யாழ்ப்பாண போதனா மருத்துவமனைக்கு காணி ஒதுக்கீடு மற்றும் ஆசிரியர் வெற்றிடங்களுக்கு ஆட்சேர்ப்புக்கான நிதியை ஒதுக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் ஜனாதிபதி கூறினார்.

நேற்று முன்தினம் யாழ்ப்பாணம் மாவட்ட செயலகத்தில் சுகாதாரம் மற்றும் கல்வித் துறைகள் தொடர்பில் இளைஞர் சமூகத்தின் பிரதிநிதிகளுடன் நடந்த கலந்துரையாடலில் கலந்துகொண்டபோதே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இதனை குறிப்பிட்டார்.

சுகாதாரத்துறை, கல்வித் துறை சார்ந்த இளைஞர் சமூகத்தை பிரதிநிதித்துவப் படுத்தும் சுமார் 300 பேர் இதில் கலந்துகொண்டதுடன், அவர்களின் கேள்விகளுக்கு ஜனாதிபதி பதில்களை வழங்கினார்.

மேலும், இதன்போது வடமாகாணத்தை தேசிய பொருளாதாரத்துடன் இணைப்பதற்கு தேவையான அனைத்து ஆதரவையும் வழங்குவதாக தெரிவித்த ஜனாதிபதி, அரச அதிகாரிகள் மற்றும் இளைஞர்களும் தங்களின் பங்களிப்பை வழங்குமாறு கேட்டுக்கொண்டார்.



யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில் காணப்படும் குறைபாடுகள், பௌதிக மற்றும் மனித வளங்களை மேம்படுத்துவது தொடர்பிலான பரிந்துரையொன்றும் இதன்போது யாழ். பல்கலைக்கழக சிரேஷ்ட பேராசிரியர் ஒருவர் ஜனாதிபதியிடம் கையளித்தார். (ஐ)

# யாழ்ப்பாணம் - அநுராதபுரம் ரயில் சேவை நேற்று ஆரம்பம்!

கொழும்பு, ஜன. 08

வடக்கு ரயில் பாதையில் மஹவ மற்றும் அநுராதபுரத்துக்கு இடையிலான ரயில் பாதை நேற்று முதல் தற்காலிகமாக மூடப்பட்டது. மஹவ மற்றும் அநுராதபுரம் இடையேயான பாதை அபிவிருத்திக்காகவே 6 மாதங்களுக்கு மூடப்படவுள்ளதாக ரயில்வே பிரதி பொது முகாமையாளர் தெரிவித்துள்ளார்.

இதன்படி, நேற் முதல் கொழும்பிலிருந்து மஹவ வரையும் அநுராதபுரத்திலிருந்து காங்கேசன்துறை வரையுமே ரயில் சேவைகள் இடம்பெறும் என்றும் அவர் தெரிவித்தார். (ஐ)

# போதைப்பொருள் பாவனையே சிறை தொற்றுநோய்க்கு காரணம்!

## சிறைச்சாலைகள் மருத்துவ பிரிவு

கொழும்பு, ஜன. 08

போதைப்பொருள் பாவனையாளர்களின் எண்ணிக்கை அதிகரிப்பே சிறைச்சாலைகளில் தொற்றுநோய்களின் பரவல் அதிகரிப்பதற்கு காரணம் என சிறைச்சாலை திணைக்களத்தின் மருத்துவப் பிரிவு தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் சிறைச்சாலை திணைக்களத்தின் மருத்துவப் பிரிவு தீவிர கவனம் செலுத்தியுள்ளதாக சிறைச்சாலை சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஹேமந்த ரணசிங்க தெரிவித்தார்.

போதைப்பொருளுக்கு அடிமையான கைதிகளுக்கு நோய் எதிர்ப்பு சக்தி குறைவதால், அவர்களுக்கு தொற்று நோய்கள் ஏற்படுவது அதிகரித்துள்ளது என்றும் அவர் தெரிவித்தார். (ஐ)

# சுவாச நோய்களுக்கான மருந்துகள் தட்டுப்பாடு!

கொழும்பு, ஜன. 08

அரச மருத்துவமனைகளில் சுவாச நோய்களுக்கு தேவையான பெரும்பாலான மருந்துகளுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதால் நோயாளர்கள் கடும் சிரமங்களுக்கு உள்ளாகியுள்ளனர் என்று அகில இலங்கை மருத்துவ அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

தற்போது நிலவும் கால நிலையால் ஆஸ்துமா, சுவாச அமைப்பு தொடர்பான நோய்த்தொற்றுகள் உள்ளிட்ட சுவாச நோய்கள் அதிகரித்து வருகின்றன.

இந்தநிலையில் சுவாச நோய்களுக்கு பயன்படுத்தப்படும் மருந்துகளுக்குப் பெரும் தட்டுப்பாடு நிலவுகிறது என்றும் அந்த சங்கம் தெரிவித்துள்ளது. (ஐ)

# தென்னகோன் மீது நடவடிக்கை; சட்டமா அதிபரிடம் வலியுறுத்து

## சட்டத்தரணிகள், சிவில் பிரதிநிதிகள் கடிதம்

கொழும்பு, ஜன. 08

பதில் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னகோன் உள்ளடங்கலாக 107/2011 இலக்கமிடப்பட்ட அடிப்படை உரிமைகள் மீறல் மனுவில் பிரதிவாதிகளாகப் பெயரிடப்பட்டுள்ளவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்குமாறு சட்டமா அதிபர் சஞ்சய் ராஜரட்ணத்திடம் சட்டத்தரணிகள் கூட்டிணைவு உறுப்பினர்கள் மற்றும் சிவில் சமூகப்பிரதிநிதிகள் கடிதம் மூலம் கூட்டாக வலியுறுத்தியுள்ளனர்.

கடந்த 2011ஆம் ஆண்டு மிரிஹான பொலிஸ் நிலையத்தில் நபர் ஒருவர் கைதுசெய்யப்பட்டு தன்னிச்சையாக தடுத்து வைத்து, சித்திரவதைகளுக்கு உட்படுத்தியதன் மூலம் அவரின் அடிப்படை உரிமைகள் மீறப்பட்டன. எனவே, இதற்கு பொறுப்பாளிகளான தேசபந்து தென்னகோன் உள்ளிட்ட 4 பொலிஸ் அதிகாரிகள் பாதிக்கப்பட்ட அந்த பருக்கு தமது சொந்தப்பணத் தில் தலா 5 இலட்சம் ரூபாயை நட்டஈடாக வழங்கவேண்டுமென கடந்த மாதம் 14 ஆம் திகதி உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

இந்நிலையில் பதில் பொலிஸ்மா அதிபராகப் பதவி வகித்துவரும் தேசபந்து தென்னகோன் உயர்நீதிமன்றத்தினால் குற்றவாளியாக தீர்ப்பளிக்கப்பட்ட நிலையில், அவரை அப்பதவியிலிருந்து நீக்குமாறு சட்டத்தரணிகள் கூட்டிணைவு ஏற்கனவே ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவிடம் கடிதம் மூலம் வலியுறுத்தியிருந்தது.

இவ்வாறானதொரு பின்னணியிலேயே தற்போது தேசபந்து தென்னகோன் உள்ளடங்கலாக அந்த வழக்கில் பிரதிவாதிகளாகப் பெயரிடப்பட்டுள்ள நபர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்குமாறுகோரி சட்டத்தரணிகள் கூட்டிணைவில் அங்கம்வகிக்கும் ஜனாதிபதி சட்டத்தரணிகளும், சிவில் சமூகப்பிரதிநிதிகளும் இணைந்து சட்டமா அதிபர் சஞ்சய் ராஜரட்ணத்துக்கு கடிதம் அனுப்பியுள்ளனர்.

உயர்நீதிமன்ற தீர்ப்பின் பிரகாரம் சித்திரவதைகளுக்கு உட்படுத்தல் எனும் குற்றத்தைப் புரிந்த பொலிஸ் அதிகாரிகளுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்குமாறும், தேசபந்து தென்னகோன் பதில் பொலிஸ்மா அதிபராகப் பதவி வகிக்கும்போது இவ்விவகாரம் தொடர்பில் சுயாதீன விசாரணைகளை முன்னெடுக்கமுடியாது என்பதால், அவரை அப்பதவியிலிருந்து இடைநிறுத்துமாறு உரிய தரப்பினருக்கு ஆலோசனை வழங்குமாறும் அக்கடிதத்தில் வலியுறுத்தப்பட்டுள்ளது. (ஐ)

# 4 கிரிக்கெட் வீரர்கள் பொலிஸில் இணைவு

கொழும்பு, ஜன. 08

கடந்த ஆண்டு முதல் பொலிஸ் கிரிக்கெட் கழகத்தைப் பிரதிநிதித்துவப்படுத்திய நான்கு இலங்கை கிரிக்கெட் வீரர்கள் பொலிஸில் இணைந்தனர்.

குசல் ஜனித் பெரேரா மற்றும் சாமர சில்வா ஆகியோர் பிரதான பொலிஸ் பரிசோதகர்களாகவும், அஷேன் பண்டார மற்றும் நுவன் பிரதீப் ஆகியோர் பொலிஸ் பரிசோதகர்களாகவும் இணைந்துள்ளனர்.

சமீபத்தில் முடிவடைந்த இலங்கை கிரிக்கெட் முதல்தர போட்டியில் கூட்டு சம்பியன் அந்தஸ்தை பெற்ற இலங்கை பொலிஸ் கிரிக்கெட் அணியை வீரர்கள் பிரதிநிதித்துவப் படுத்துகின்றனர்.

பொது பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ், பதில் பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னகோன் முன்னிலையில் பொலிஸில் இணைந்து கொண்ட நான்கு கிரிக்கெட் வீரர்களுக்கு உத்தியோகபூர்வ நியமனக் கடிதங்களை வழங்கினார். (ஐ)

# யானை தாக்கி இளைஞர் பலி!

கொழும்பு, ஜன. 08

காட்டு யானையின் தாக்குதலுக்கு இலக்காகி இளைஞரொருவர் உயிரிழந்தார்.

பொலநறுவை - வெலிக்கந்தை பிரதேசத்தில் நேற்று முன்தினம் இரவு இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

அருகிலிருந்த காட்டுப் பகுதியில் மரம் வெட்டிக் கொண்டிருந்தபோதே காட்டு யானையின் தாக்குதலுக்கு உள்ளாகி சம்பவ இடத்திலேயே குறித்த நபர் உயிரிழந்தார்.

அதே இடத்தைச் சேர்ந்த வசந்த பண்டார என்ற 28 வயதுடைய இளைஞனே இவ்வாறு உயிரிழந்தார். (ஐ)

# பொலிஸ் சுற்றிவளைப்பின்போது தப்பியோடியவர் தவறிவிழுந்து பலி!

கொழும்பு, ஜன. 08

பொலிஸாரின் சுற்றிவளைப்பில் தப்பியோடிய நபர் ஒருவர் பாறையிலிருந்து தவறி விழுந்து உயிரிழந்தார்.

குருநாகல், வில்பாவ பகுதியில் நேற்று முன்தினம் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

உயிரிழந்த இளைஞர் உள்ளிட்ட நால்வர் காட்டுப் பகுதியில் கசிப்பு குடித்துக் கொண்டிருந்தனர். அந்த சமயம், பொலிஸார் அப்பகுதியை சுற்றிவளைத்திருந்தனர்.

பொலிஸாரை கண்ட குழுவினர் அங்கிருந்து தப்பியோடியுள்ளனர். அப்போதே பாறையிலிருந்து தவறிவிழுந்து இளைஞர் உயிரிழந்தார். இருவரை பொலிஸார் கைது செய்தனர். மற்றொருவர் தப்பியோடியுள்ளார்.

சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

# யுக்திய நடவடிக்கையில் 1,135 பேர் கைதாகினர்!

கொழும்பு, ஜன. 08

"யுக்திய" நடவடிக்கையின் கீழ் நேற்று அதிகாலை 12.30 மணியுடன் முடிவடைந்த 24 மணி நேரத்துக்குள் ஆயிரத்து 135 பேர் சந்தேகத்தில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களில் 16 பேர் புனர்வாழ்வு நிலையங்களுக்கு அனுப்பப்பட்டதுடன், 46 பேர் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

நாடளாவிய ரீதியில் மேற்கொள்ளப்பட்டு வரும் போதைப்பொருள் எதிர்ப்பு நடவடிக்கையை பொலிஸார், விசேட அதிரடிப்படையினர், இராணுவத்தினர் மற்றும் கடற்படையினர் இணைந்து முன்னெடுத்துள்ளனர். இதன்போதே, அவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்த சுற்றிவளைப்பில், 56 கிலோ 100 கிராம் ஹெரோயின், 189 கிலோ 600 கிராம் ஐஸ் போதைப்பொருள், 2,024 போதை மாத்திரைகள், 5 கிலோ 900 கிராம் கஞ்சா மற்றும் 2,420 கஞ்சா செடிகள் என்பன கைப்பற்றப்பட்டன என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# வெவ்வேறு வீதி விபத்துகளில் 2 பெண்கள் உட்பட ஐவர் பலி!

கொழும்பு, ஜன. 08

நாட்டில் வெவ்வேறு இடங்களில் இடம்பெற்ற வீதி விபத்துகளில் பெண்கள் இருவர் உட்பட ஐந்து பேர் பலியாகினர்.

நேற்று முன்தினம் இடம்பெற்ற இந்த விபத்துகள் குறித்து மேலும் அறிய வருவதாவது,

காலி - எல்பிட்டி - அம்பலாங்கொட வீதியில் 9 ஆவது மைல்கல் அருகில் மோட்டார் சைக்கிளும் கெப் ரக வாகனமும் மோதியது. இதில், மோட்டார் சைக்கிளில் சென்ற ஆணும் பெண்ணும் படுகாயமடைந்து எல்பிட்டி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். அங்கு சிகிச்சை பலனின்றி இருவரும் உயிரிழந்தனர்.

இதேவேளை, கொழும்பு - நீர்கொழும்பு வீதியில் மோட்டார் சைக்கிள் - கெப் ரக வாகனம் மோதியதில் தம்பதியர் இருவர் உயிரிழந்தார். இந்த விபத்தில் ஜா எல பகுதியை சேர்ந்தவர்களே உயிரிழந்தனர்.

இதேவேளை, கிரானேகம, வட்டகல சந்தியில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் 31 வயது நபர் உயிரிழந்தார். (ஐ)

# மருந்து வாங்கி வராததை கண்டித்த தாயாரை அடித்துக் கொன்ற மகன்!

கொழும்பு, ஜன. 08

மருந்து வாங்கித் தராததைக் கண்டித்த தாயாரை இரும்புக் கம்பியால் தாக்கிக் கொலை செய்த மகனை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

சந்தேகநபரின் மனைவி வெளிநாட்டில் பணிபுரிந்து வருகிறார். சந்தேகநபரும் அவரின் தாயாரும் ஒரே வீட்டில் வசிக்கின்றனர். இவர்களுடன் சந்தேகநபரின் 8 வயது மகளும் வசித்து வருகிறார்.

சம்பவ தினமான கடந்த வெள்ளிக்கிழமை, தனக்கு மருந்து வாங்கி வருமாறு மகனிடம் கூறியுள்ளார். அன்றிரவு, மதுபோதையில் வந்த மகனிடம் தான் வாங்கி வருமாறு கூறிய மருந்தைக் கேட்டுள்ளார். அவர் வாங்கி வரவில்லை என்று அறிந்த தாயார், அவரை கண்டித்துள்ளார்.

இதனால், ஆத்திரமுற்ற நபர் தனது தாயாரை இரும்புக் கம்பியால் தாக்கியுள்ளார். இதில் அவர் காயமடைந்துள்ளார். அவர்களின் வீட்டின் அருகே வேறு குடிமனைகள் இல்லாததால் காயமடைந்த தாயாருக்கு உதவி எதுவும் கிடைக்கவில்லை.

இந்த நிலையில் மறுநாளான நேற்று முன்தினம் சனிக்கிழமை தாயாரை மருத்துவமனையில் சந்தேகநபர் சேர்த்துள்ளார். அங்கு சிகிச்சை பலனின்றி அவர் உயிரிழந்தார். இதையடுத்து சந்தேகநபர் தலைமறைவான நிலையில் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

இந்த சம்பவம் கம்பளை - ரத்மல்கடுவ பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது. (ஐ)

# ஜனாதிபதி தேர்தலில் பொது வேட்பாளர் சகல தமிழ் கட்சிகளுடனும் பேசத் தயார்

## ஐக்கிய மக்கள் சக்தி அறிவிப்பு

கொழும்பு, ஜன. 08

**அனைத்து தமிழ் அரசியல் கட்சிகளுடனும் பேச்சுகளை நடத்துவதற்கு தயார் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச்செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார பகிரங்கமாக அறிவித்துள்ளார்.**

எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் தமிழ் அரசியல் கட்சிகள் தமிழ் பொதுவேட்பாளர் ஒருவரை நிறுத்துவது தொடர்பில் ஆலோசித்து வருகின்றமை தொடர்பில் கருத்து வெளியிடும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஐக்கிய மக்கள் சக்தியானது, நாட்டின் அனைத்து இனங்களையும் பிரதிநிதித்துவப்படுத்தியுள்ள தரப்பாகும். அதுமட்டுமன்றி, சிறுபான்மை கட்சிகளும் சிறிய கட்சிகளும் எம்முடன் தொடர்ச்சியாக ஐக்கிய கூட்டணியில் இணைந்து செயற்பட்டு வருகின்றன.

அதேநேரம், தமிழ் அரசியல் கட்சிகள் தமது சார்பில் வேட்பாளரை நிறுத்துவதற்கு முழுமையான உரித்தைக் கொண்டிருக்கின்றன. அதில் நாம் மாற்றுக்கருத்தைக் கொண்டிருக்கவில்லை.

இருப்பினும், அந்தத் தரப்பினரையும் எம்முடன் இணைத்து எமது பரந்துபட்ட கூட்டணியில் பங்களிகளாக்குவதற்கு நாம் தயாராகவே உள்ளோம். இன, மொழி, மத வேறுபாடுகளை கடந்து அனைவரும் இலங்கையர்கள் என்ற அடையாளத்தை கட்டியெழுப்புவதற்காக நாம் தொடர்ச்சியாக அர்ப்பணிப்புடன் செயல்பட்டு வருகின்றோம்.

ஆகவே, தமிழ் மக்கள் தொடர்ச்சியாக எம்மிலிருந்து விலகி நிற்கும் நிலைமையை தவிர்ப்பதற்காக நாம் அனைத்து தமிழ் கட்சிகளுடனும் பேச்சுக்களை நடத்துவதற்கு தயாராகவே உள்ளோம்.

மேலும், நாட்டில் அனைத்து சமூகங்களுக்கும் சுபீட்சமான எதிர்காலம் ஒன்றை உருவாக்குவதாக இருந்தால் அனைவரும் ஒன்றிணைவது அவசியமாகும். அந்த செயல்பாட்டில் நாம் அனைவருடனும் கைகோப்பதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்கவுள்ளோம்.

தெற்கில் மாற்றத்தை மக்கள் எதிர்பார்க்கின்றார்கள். அதுபோன்றுதான் வடக்கிலும் மக்கள் மாற்றத்தை எதிர்பார்க்கின்றார்கள். அந்த மாற்றத்துக்கான தலைமையை ஐக்கிய மக்கள் சக்தி வழங்குவதற்கு தயாராகிவிட்டது. அதற்காக அனைவரது ஒத்துழைப்புக்களையும் பெறவுள்ளோம் - என்றார். (ஐ)



# வெளிநாட்டு சிகரெட்களுடன் சந்தேகநபர் நேற்று கைதானார்

கொழும்பு, ஜன. 08

வெளிநாட்டு சிகரெட்களுடன் வர்த்தகர் ஒருவர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் பொலிஸ் போதைப்பொருள் தடுப்பு பிரிவினரால் நேற்று ஞாயிற்றுக்கிழமை கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்டவர் கம்பஹா - நிட்டம்புவை பிரதேசத்தை சேர்ந்த 38 வயதுடையவர் ஆவார்.

இவர் நேற்று அதிகாலை 01.10 மணியளவில் துபாயிலிருந்து கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்துள்ளார்.

அங்கு நடத்தப்பட்ட சோதனையில் சந்தேக நபரின் இரு பயணப் பொதிகளிலிருந்து 156 சிகரெட் பெட்டிகள் கைப்பற்றப்பட்டுள்ளன.

கைதானவர் பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார். சந்தேகநபரிடம் கைப்பற்றப்பட்ட சிகரெட்களை சட்ட நடவடிக்கைக்காக நீர்கொழும்பு நீதிமன்றில் கையளிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (ஐ)

# ஜப்பான் நிதியமைச்சர் இலங்கை வருகின்றார்

கொழும்பு, ஜன. 08

ஜப்பான் நாட்டின் நிதியமைச்சர் ஸூனிச்சி சுஸூகி தலைமையிலான 10 பேரடங்கிய உயர்மட்டப் பிரதிநிதிகள் குழுவினர் இரண்டு நாட்கள் உத்தியோகபூர்வ பயணமாக எதிர்வரும் 11 ஆம் திகதி இலங்கைக்கு வருகை தரவுள்ளனர்.

ஜப்பானுக்கான இலங்கைத் தூதுவர் ஈ. ரொட்னி எம். பெரேரா மற்றும் ஜப்பான் நிதியமைச்சர் ஸூனிச்சி சுஸூகி ஆகியோருக்கு இடையிலான சந்திப்பு அண்மையில் ரோக்கியோவில் நடைபெற்றது.

இந்த சந்திப்பின்போது ஜப்பான் நிதியமைச்சர் தலைமையில் நிதியமைச்சின் சிரேஷ்ட அதிகாரிகள் 10 பேர் அடங்கிய குழுவினர் இரண்டு நாட்கள் உத்தியோகபூர்வ பயணமாக இலங்கை வரவுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.

இந்த சந்திப்பின்போது, ஜப்பானிய நிதியமைச்சரின் இலங்கை வருகை அறிவிப்பு தொடர்பில் தனது மகிழ்ச்சியை வெளிப்படுத்திய தூதுவர் ரொட்னி பெரேரா, இலங்கையின் பொருளாதார மறுசீரமைப்பு நடவடிக்கைகளுக்கு இருதரப்பு அடிப்படையிலும், சர்வதேச ரீதியிலும் ஜப்பான் வழங்கிவரும் ஒத்துழைப்புக்களுக்கு நன்றி தெரிவித்தார். அதுமாத்திரமன்றி ஜப்பானின் அனுபவ மற்றும் நிபுணத்துவ ஒத்துழைப்புடன் நாட்டின் பொருளாதாரம் மற்றும் கைத்தொழிற்துறையை நவீனமயப்படுத்துவதில் இலங்கை ஆர்வம் கொண்டிருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இதுஇவ்வாறிருக்க சுமார் 10 வருட இடைவெளியின் பின்னர் இடம்பெறவிருக்கும் ஜப்பானிய நிதியமைச்சரின் இலங்கை வருகை பொருளாதார ரீதியில் மிகமுக்கியத்துவம் வாய்ந்ததாக நோக்கப்படுவதுடன், இதன்போது அவர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை சந்தித்துக் கலந்துரையாடவுள்ளார். (ஐ)

# ஐ. எம். எவ்விடம் செல்லாத எங்கள் தீர்மானம் சரியென்பது நிரூபணம்!

## அஜித் நிவாட் கப்ரால்



கொழும்பு, ஜன. 08

சர்வதேச நாணய நிதியத்துக்கு செல்வதை தவிர்க்க வேண்டும் என்ற எமது தீர்மானங்கள் சரியானவை என்று பொதுமக்கள் ஏற்றுக்கொள்ளும் காலம் தற்போது வந்துள்ளது என்று இலங்கை மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் தெரிவித்துள்ளார்.

வற் வரி அதிகரிப்பு தொடர்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், பொருளாதார ரீதியில் நெருக்கடியான நிலைமையொன்று ஏற்பட்டபோது அதனை உள்நாட்டு நிலைமைகள் ஊடாக சீர் செய்ய முடியும் என்ற விடயத்தை நாம் கடந்த காலங்களில் தொடர்ச்சியாக வலியுறுத்தினோம்.

சர்வதேச நாணய நிதியத்திடம் நீடிக்கப்பட்ட கடன் வசதியை பெற்றுக்கொள்வதால் நிலைமைகள் மேலும் மோசமடையும். குறிப்பாக சதாரண மக்களின் அன்றாட வாழ்வாதார நிலைமைகள் நெருக்கடிக்குள்ளாகும் என்று முன்னரே கூறினேன்.

எனினும், அச்சமயத்தில் என் மீதும் அப்போதைய அரசாங்கத்தின்மீதும் மிகக் கடுமையான விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டன. சர்வதேச நாணய நிதியத்திடம் செல்லவில்லை என்று குறிப்பிட்டு எனக்கு எதிராக நீதிமன்றத்தைக் கூட நாடியிருந்தார்கள்.

ஆனால், தற்போதைய ஆட்சியாளர்கள் சர்வதேச நாணய நிதியத்தை நாடி, இரண்டாவது கடன் தவணையையும் பெற்றனர். இதனால், தற்போது மக்கள் மீது வரிச்சுமை அதிகரித்துள்ளது. மக்கள் அன்றாட வாழ்வை முன்னகர்த்த முடியாது நெருக்கடியில் சிக்கியுள்ளனர்.

இந்த தருணத்தில் பலர் நாம் ஏலவே தெரிவித்த கருத்துகளும், தீர்மானமும் சரி என்பது நிரூபணமாகியுள்ளது. இதனை பொதுமக்களும் ஏற்றுக்கொள்ளும் காலமும் வந்துவிட்டது - என்றார். (ஐ)

# படுகொலையான ஊடகவியலாளர்களுக்கு நீதி கோரி இன்று கவனவீர்ப்பு போராட்டம்!

மட்டக்களப்பு, ஜன. 08

கடத்தப்பட்ட, படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர்களுக்கு நீதி கோரி இன்று மட்டக்களப்பில் கவனவீர்ப்பு போராட்டம் நடைபெறவுள்ளது.

படுகொலை செய்யப்பட்ட சிரேஷ்ட ஊடகவியலாளர் அமரர் லசந்த விக்கிரமதுங்கவின் 15ஆவது ஆண்டு நினைவு தினம் இன்று திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு மட்டக்களப்பில் உள்ள ஊடகவியலாளர்களின் நினைவு தூபியில் அனுஷ்டிக்கப்படவுள்ளது.

கிழக்கு இலங்கை செய்தியாளர் சங்கம், மட்டக்களப்பு மாவட்ட தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம், மட்டக்களப்பு ஊடக அமையம் என்பன இணைந்து இந்த நினைவேந்தலை முன்னெடுக்கவுள்ளன.

இன்று முற்பகல் 10 மணிக்கு மட்டக்களப்பு நகரிலுள்ள இலங்கையில் படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர்கள் நினைவுத்தூபியில் மலர் அஞ்சலி செலுத்தப்பட்டு கடத்தப்பட்ட, படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர்களுக்கு நீதி கோரி கவனவீர்ப்பு போராட்டம் ஒன்றும் இடம்பெறவுள்ளது. (ஐ)



## கைக்குண்டு மீட்கப்பட்டது

மட்டக்களப்பு, ஜன. 08

குப்பைபோடும் இடத்தில் இருந்து நவீனரக கைக்குண்டு ஒன்றை பொலிஸார் மீட்டுள்ளனர்.

மட்டக்களப்பு தலைமையக பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சின்ன உப்போடை பகுதியில் வாவிக்கரைகாமையில் இந்தக் கைக்குண்டு மீட்கப்பட்டது.

நேற்றுக் காலை கைக்குண்டை அவதானித்த பொதுமக்கள் பொலிஸாருக்கு வழங்கிய தகவலைத் தொடர்ந்தே இந்தக் கைக்குண்டு மீட்கப்பட்டது. (ஐ)

## கிழக்கில் சிறீதரன் எம். பி. பிரசாரத்தை ஆரம்பித்தார்

மட்டக்களப்பு, ஜன. 08

**இலங்கை தமிழரசு கட்சியின் தலைமைக்கு போட்டியிடுபவர்களில் ஒருவரான பாராளுமன்ற உறுப்பினர் சி. சிறீதரன் நேற்றுமுன்தினம் மட்டக்களப்புக்கு வருகை தந்துள்ளார்.**



கட்சியின் தலைமைப் பதவிக்கு போட்டியிடும் அவர் கட்சி உறுப்பினர்களை சந்தித்து தனக்கான ஆதரவை திரட்டி வருகிறார். தமிழரசு கட்சியின் பொதுக் குழு உறுப்பினர்கள், கட்சியின் ஆதரவாளர்களை தனி யாகவும், குழுவாகவும் அவர் சந்தித்து வருகிறார் என்று அறிய வருகின்றது.

இலங்கை தமிழரசு கட்சியின் தலைமைக்கான தேர்தல் எதிர்வரும் 21ஆம் திகதி நடைபெறவுள்ளது. தலைமைக்கான போட்டியில் சி. சிறீதரன், ம. ஆ. சுமந்திரன், சீ. யோகேஸ்வரன் ஆகியோர் போட்டியிடவுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## கிழக்கு மாகாண தபாலகத்தின் புதிய கட்டடம் திறக்கப்பட்டது!



மட்டக்களப்பு, ஜன. 08

கிழக்கு மாகாணத்தில் தபால் சேவை நடவடிக்கைகளை மேலும் விரிவுபடுத்தும் பொருட்டு சுமார் 45 கோடி ரூபாய் செலவில் நிர்மாணிக்கப்பட்ட 5 மாடிகள் கொண்ட கிழக்கு மாகாண தபாலக நிர்வாக கட்டடத் தொகுதி நேற்று வைபவ ரீதியாக திறந்து வைக்கப்பட்டது.

மாகாண பிரதி அஞ்சல்மா அதிபர் முகமத் அஸ்லம் தலைமையில் நடைபெற்ற இந்த திறப்பு விழா நிகழ்வில் போக்குவரத்து ஊடகத்துறை நெடுஞ்சாலைகள் தபால்துறை அமைச்சர் பந்துல குணவர்தன பிரதம அதிதியாக கலந்துகொண்டு அஞ்சல் கட்டட தொகுதியை திறந்து வைத்தார்.

திறப்பு விழாவில் ஊடகத்துறை இராஜாங்க அமைச்சர் சாந்த பண்டார, மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்தி குழுவின் தலைவரும் இராஜாங்க அமைச்சருமான சிவநேசதுரை சந்திரகாந்தன், இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரன், மதத் தலைவர்கள் பொதுமக்கள் எனப் பலர் பங்கேற்றனர்.

இந்தப் புதிய கட்டட தொகுதியில் கிழக்கு மாகாண பிரதி அஞ்சல் பிரிவு மாத்திர மன்றி, அலுவலகம், வாகன நிர்வாக கணக்கிட்டு பகுதி, மாகாண அஞ்சல் பயிற்சி நிலையம், மட்டக்களப்பு மாவட்ட அஞ்சல் அத்தியட்சகர் அலுவலகம் என்பனவும் அமையப்பெற்றுள்ளன. (ஐ)



## கொக்கட்டிச்சோலையில் கசிப்பு நிலையம் சிக்கியது

மட்டக்களப்பு, ஜன. 08

போதைப்பொருளை ஒழிக்கும் நோக்கில் நாடு முழுவதும் யுக்திய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் நேற்று ஞாயிற்றுக்கிழமை முன்னெடுக்கப்பட்ட சோதனை நடவடிக்கையின்போது கசிப்பு உற்பத்தி நிலையம் ஒன்று பிடிபட்டது.

கொக்கட்டிச்சோலை - வாவி ஒன்றுக்கு அருகிலேயே இந்த கசிப்பு உற்பத்தி நிலையம் சிக்கியது.

பொலிஸார் அங்கு சென்றபோது, சந்தேகநபர்கள் தப்பியோடி இருந்தனர். அங்கிருந்த 9 பீப்பாய் கோடா மற்றும் கசிப்பு வடிப்பதற்கான உபகரணங்களை பொலிஸார் கைப்பற்றினர். (ஐ)

## வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட போரதீவு மக்களுக்கு உலருணவு!

மட்டக்களப்பு, ஜன. 08

போரதீவுப்பற்று வேத்துச்சேனை கிராமத்தில் வெள்ள அனர்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு, லண்டன் வோள்தஸ்ரோ கற்பக விநாயகர் ஆலயத்தின் அனுசரணையில் அகிலன் பவுண்டேசனால் உலருணவு பொதிகள் வழங்கப்பட்டன.

போரதீவுப்பற்று பிரதேசசெயலாளர் ரங்கநாதன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் இலங்கைக்கான அகிலன் பவுண்டேசன் இணைப்பாளர் வி. ஆர். மகேந்திரன்,

கிராம உத்தியோகத்தர், சமுர்த்தி உத்தியோகத்தர், பொருளாதார உத்தியோகத்தர் கலந்துகொண்டு இதனை வழங்கிவைத்தனர்.



## 4,500 சிகரெட்களுடன் ஏழு பேர் நேற்று கைது!

மட்டக்களப்பு, ஜன. 08

போதைப்பொருள் ஒழிக்கும் நோக்கில் முன்னெடுக்கப்படும் யுக்திய நடவடிக்கையில் வெளிநாட்டு சிகரெட்களுடன் ஏழு பேர் கைது செய்யப்பட்டனர்.

மட்டக்களப்பு - மயிலம்பாவெளியில் நடத்தப்பட்ட இந்த சுற்றிவளைப்பு நடவடிக்கையில் சட்டவிரோதமாக நாட்டுக்கு கொண்டு வரப்பட்ட சுமார் ஆறு இலட்சம் ரூபாய் பெறுமதியான 4 ஆயிரத்து 500 வெளிநாட்டு சிகரெட்கள் கைப்பற்றப்பட்டன.

இந்தத் தகவலை ஏறாவூர் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பிரதம பொலிஸ் பரிசோதகர் ஹர்ஷ டி சில்வா தெரிவித்துள்ளார்.

கைதுசெய்யப்பட்டவர்கள் இன்றைய தினம் ஏறாவூர் சுற்றுலா நீதிமன்றில் முற்படுத்தப்படவுள்ளனர். (ஐ)

ஈழநாடு



# வடக்கு காஸாவிலிருந்து இஸ்ரேல் படை விலகமுடிவு

## போர் மற்ற பகுதிகளுக்கு விரிவடையும்

ஜெருசலேம், ஜன. 08

இஸ்ரேல் இராணுவம் வடக்கு காஸாவின் முதன்மையான களங்களிலிருந்து வெளியேற முடிவு செய்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

வடக்கு பகுதிகளில் ஹமாஸின் கட்டுமானங்களை முற்றிலும் அழிந்துள்ள நிலையில் இஸ்ரேல் தனது போர் நடவடிக்கைகளை மத்திய மற்றும் தெற்கு காஸாவில் விரிவுபடுத்தவுள்ளது.

இந்த அறிவிப்பு அமெரிக்க வெளியுறவு துறை அமைச்சர் அன்ரனி பிளிங்கனின் இஸ்ரேல் வருகைக்கு பின்னர் வெளியாகியுள்ளது. காஸாவின் பெரும்பாலான மக்கள் தெற்கு நோக்கி இடம்பெயர வற்புறுத்தப்பட்ட நிலையில் இராணுவத்தின் தெற்கு நோக்கிய தாக்குதல் அவர்களை இன்னும் குறுகிய இடத்துக்கு நகர்த்தும் நிலை உருவாகியுள்ளது.

மத்திய காஸாவின் நகரமான டெய்ர் அல்-பலாஹாவில் இருந்து மக்களை இடம்பெயருமாறு இராணுவம் துண்டுப் பிரசுரங்களை வெளியிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(ஐ)



# தென்கொரியத் தீவின்மீது வடகொரியா துப்பாக்கி சூடு

சியோல், ஜன. 08

தென் கொரியாவுக்கு சொந்தமான யோன்பியோங் தீவின்மீது தொடர்ந்து மூன்றாவது நாளாக வட கொரியா துப்பாக்கி சூடு பயிற்சியில் ஈடுபட்டுள்ளது. இதனால், தீவுவாசிகள் வீட்டைவிட்டு வெளியே வர வேண்டாம் என்று தென் கொரியா எச்சரித்துள்ளது.

தென் கொரியாவின் மேற்கு கடற்கரை பகுதியில் வட கொரியா துப்பாக்கிச்சூட்டு பயிற்சி நடந்தி வருவதாக யோன்ஹப் செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

இதனிடையே, வட கொரியாவின் துப்பாக்கிச் சூடு சத்தம் இந்தபகுதிகளில் கேட்பதால் வீட்டைவிட்டு வெளியே வரும் மக்கள் எச்சரிக்கையுடன் இருக்கும் படி தென் கொரிய அரசு அனைத்து மக்களுக்கும் குறுஞ் செய்தி அனுப்பியுள்ளது என்று உள்ளூர் அதிகாரிகள் தெரிவித்தனர்.

முன்னதாக தென் கொரியாவுக்கு சொந்தமான யோன் பியோங் தீவு பகுதியில் வட கொரியா வெள்ளிக்கிழமை திடீர் பீரங்கி குண்டு தாக்குதல் நடத்தியது. இந்த தீவு தொடர்பாக இரு நாடுகளுக்கு இடையே நீண்ட ஆண்டுகளாக பிரச்னை நீடித்து வரும் நிலையில், வட கொரியாவின் இராணுவ நடவடிக்கையால் கொரிய தீபகற்பம் பகுதியில் போர் பதற்றம் உருவாகி யுள்ளது.

200இற்கும் மேற்பட்ட பீரங்கி குண்டுகளை வீசி வட கொரியா தாக்குதல் நடத்தியுள்ளதாக தென் கொரிய இராணுவம் தெரிவித்திருந்தது. தென் கொரிய கூட்டுப் படை தலைவர்களின் செய்தித் தொடர்பாளர் இந்த தாக்குதல் தொடர்பாக பேசுகையில், “இது கொரிய தீபகற்பத்தில் பதற்றத்தை அதிகரித்து அமைதியை குலைக்கும் ஆத்திரமூட்டும் செயல்” என்று தெரிவித்திருந்தார்.

# ரஷ்யாவின் தாக்குதலில் உக்ரைனில் 11 பேர் பலி!

மொஸ்கோ, ஜன. 08

உக்ரைனின் போக்ரோவ்ஸ்க் நகரில் நடத்தப்பட்ட தாக்குதலில் 5 சிறுவர்கள் உட்பட 11 பேர் உயிரிழந்தனர்.

உக்ரைன் - ரஷ்யா இடையேயான போர் இன்று 683ஆவது நாளாக நேற்றும் நீடித்தது.

இந்த நிலையில், கிழக்கு உக்ரைனின் போக்ரோவ்ஸ்க் நகரில் ரஷ்ய படையினர் நடத்திய ஏவுகணை தாக்குதலில் ஐந்து சிறுவர்கள் உட்பட 11 பேர் உயிரிழந்தனர் என்று அந்தப் பிராந்தியத்தின் ஆளுநர் தெரிவித்தார்.

60 ஆயிரம் மக்கள் தொகையைக் கொண்டிருந்த போக்ரோவ்ஸ்க் நகரில் ரஷ்ய படையினர் ஏற்கெனவே தாக்குதல் நடத்தியிருந்தனர. இந்த நிலையில், அந்த நகரின் மீது மீண்டும் தாக்குதலை தொடங்கியுள்ளனர். (ஐ)





# ஐந்து நாட்களின் பின்னர் மூதாட்டி உயிருடன் மீட்பு

## நிலநடுக்க இடிபாடுகளிலிருந்து

ரோக்கியோ, ஜன. 08

ஜப்பானை தாக்கிய நிலநடுக்கத்தால் 126 பேர் பலி யான நிலையில், 124 மணி நேரத்துக்குப் பிறகு 90 வயது மூதாட்டி உயிருடன் மீட்கப்பட்டுள்ளார்.

இஷிகவா மாகாணம் சுஸூ நகரத்தில் வாழ்ந்து வருகிற மூதாட்டியே இவ்வாறு 5 நாட்களுக்குப் பிறகு மீட்கப்பட்டுள்ளார். இருப்பினும் நிலநடுக்கத்தின்போது கொதிநீர் பட்ட காயங்களுடன் மீட்கப்பட்ட 5 வயது சிறுவன் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

சாலை மட்டத்துக்கு வீட்டின் கூரைகள் தகர்ந்த நிலையில் மழையும் பனிப்பொழிவும் இன்னும் மீட்பு பணிகளை சிக்கலாக மாற்றியுள்ளது. 200க்கும் மேற்பட்டவர்கள் காணாமல் போன நிலையில் மீட்பு பணிகள் தொடர்ந்து வருகின்றன.

(ஐ)

# உலகின் மிக உயர்ந்த கட்டடம் என்ற பெருமையை இழக்கும் புர்ஜ் கலிபா!



ஜெட்டா, ஜன. 08

உலகின் மிக உயரமான கட்டடம் என்ற பெருமையைப் பெற்றுள்ள புர்ஜ் கலிபா இன்னும் சில வருடங்களில் அதன் பெருமையை இழக்கப் போகிறது. சவூதியின் ஜெட்டா நகரில் அமைக்கப்படும் கிங்டம் ரவர் கட்டடம் ஆயிரம் மீற்றர் உயரத்தில் அமைக்கப்படுகிறது.

புர்ஜ் கலிபா கட்டடம் டுபாயில் உள்ளது. இந்த கட்டடத்தின் கட்டுமான பணிகள் 2004 டிசெம்பர் தொடங்கி 2010 டிசெம்பர் 4ஆம் திகதி நிறைவடைந்து பயன்பாட்டுக்கு வந்தது. இதன் உயரம் 828 மீற்றர் (2,716 அடி 6 அங்குலம்)

உலகின் தலைசிறந்த நட்சத்திர ஹோட்டல்கள், சொகுசு விடுதிகளை கொண்ட இந்த புர்ஜ் கலிபா கட்டடத்துக்கு உலகம் முழுவதிலும் இருந்து மக்கள் வருகின்றனர். ஐக்கிய அரபு எமிரேட்ஸூக்கு சுற்றுலா பயணிகள் நிச்சயம் செல்லும் இடங்களில் ஒன்றாக இந்த கட்டடம் உள்ளது.

இந்நிலையில், உலகின் மிக உயரமான கட்டடம் என்ற அந்தஸ்தை பெற்று, கடந்த 14 ஆண்டுகளாக கின்னஸ் சாதனையில் இடம்பெற்ற புர்ஜ் கலிபா, இன்னும் சில ஆண்டுகளில் தனது சாதனையை இழக்கப்போகிறது.

சவுதி அரேபியாவின் ஜெட்டா நகரில் தற்போது கட்டப்பட்டு வரும் ஒரு கட்டடம் முழுமையடைந்தவுடன், அது புர்ஜ் கலிபா கட்டிடத்தை விட உயரமானதாக இருக்கும். அந்த கட்டடத்தின் பெயர் கிங்டம் ரவர். இது, ஜெட்டா ரவர் என்றும் அழைக்கப்படுகிறது.

கடந்த 2013 ஏப்ரல்1ஆம் திகதி கட்டுமான பணி தொடங்கியது. இதன் உயரம் ஆயிரம் மீற்றருக்கும் மேல் இருக்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# இஸ்ரேலை பழிவாங்குவோம் ஹிஸ்புல்லாஹ் அமைப்பு சூளுரை

பெய்ரூட், ஜன. 08

லெபனான் மீது நடத்தப்பட்ட தாக்குதலில் ஹமாஸ் அமைப்பின் உபதலைவர் உயிரிழந்தார். இந்தத் தாக்குதலுக்கு இஸ்ரேல் மீது பழி தீர்க்கப்படும் என்று ஹிஸ்புல்லாஹ் போராளிகள் எச்சரித்துள்ளனர்.

இஸ்ரேல் - ஹமாஸ் இடையே போர் நடைபெறுகின்றது. இதில், ஹமாஸ் அமைப்புக்கு ஆதரவாக லெபனான் நாட்டின் ஹிஸ்புல்லாஹ் போராளிகள் தாக்குதல் நடத்தி வருகின்றனர்.

இந்த நிலையில், லெபனான் மீதும் இஸ்ரேல் தாக்குதல் நடத்தி வருகின்றது. இந்தத் தாக்குதல்களில் 3 பத்திரிகையாளர்கள் உட்பட 185 பேர் உயிரிழந்தனர்.

இதனிடையே, லெபனான் தலைநகர் பெய்ரூட்டில் நடத்தப்பட்ட ஆளில்லா விமான தாக்குதலில் ஹமாஸ் அமைப்பின் உப தலைவர் சலே அல்-அரூரியும், அவரின் 6 பாதுகாவலர் களும் உயிரிழந்தனர். மேலும் இந்த தாக்குதலில் அப்பாவி பொதுமக்கள் பலரும் கொல்லப்பட்டனர்.

இந்த தாக்குதலுக்கு இஸ்ரேல் இதுவரை வெளிப்படையாகப் பொறுப்பேற்கவில்லை. எனினும், இந்த தாக்குதலை இஸ்ரேல்தான் நடத்தியதாக ஹமாஸ் அமைப்பும் லெபனானும் குற்றம் சாட்டியுள்ளன.

இந்த நிலையில், ஹிஸ்புல்லாஹ் அமைப்பின் தலைவர் ஹாசன் நஸ்ரல்லா “ஹமாஸ் அமைப்பின் உப தலைவர் படுகொலைக்கு விரைவில் பதிலடி கொடுக்கப்படும்” என இஸ்ரேலுக்கு பகிரங்க எச்சரிக்கை விடுத்துள்ளார். அத்துடன், இஸ்ரேல் மீது லெபனான் 60 ஏவுகணைகளை வீசி தாக்கியது. இதையடுத்து லெபனான் - இஸ்ரேல் எல்லையில் போர் பதற்றம் நிலவுகிறது. (ஐ)





# ரயில் - ஓட்டோ விபத்து ஒருவர் படுகாயம்!

கொழும்பு, ஜன. 08

ரயில் ஓட்டோவை மோதித் தள்ளியதில் அதனை செலுத்திய வர் படுகாயமடைந்துள்ளார்.

காலி - மாத்தறை பிரதான வீதியின் ஹபராதுவ பகுதியில் நேற்று முன்தினம் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

ஓட்டோ சாரதியின் கவனக் குறைவே இந்த விபத்துக்குக் காரணம் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

காயமடைந்த சாரதி சிகிச் சைக்காக மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். (ஐ)

# மீண்டும் சு. கவில் இணைகிறார் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா

கொழும்பு, ஜன. 08

**முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க சிறீலங்கா சுதந்திரக் கட்சியில் மீண்டும் இணைவதற்கு சம்மதம் வெளியிட்டுள்ளார் என்று அந்தக் கட்சியின் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.**



சிறீ லங்கா சுதந்திரக் கட்சி யில் மீண்டும் இணைந்துகொள் வதை குறிக்கும்வகையில் இன் றைய தினம் காலிமுகத்திடலில் பண்டாரநாயக்க சிலைக்கு அரு கில் நடைபெறவுள்ள நிகழ்வில் அவர் பங்கேற்பார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

கட்சியின் தற்போதைய தலைவரும் முன்னாள் ஜனாதி பதியுமான மைத்திரிபால சிறிசேன கட்சியின் மத்திய குழு வுக்கு உறுப்பினர்களை நியமிக் கும் அதிகாரத்தை சந்திரிகா குமாரதுங்கவுக்கு வழங்க முன்வந்துள்ளார். எனினும், சந் திரிகா குமாரதுங்க இது குறித்து இன்னமும் பதிலளிக்க வில்லை.

எதிர்வரும் தேர்தலை முன் னிட்டு கட்சியில் சீர்திருத்தங் களை முன்னெடுக்கும் நோக் கத்திலேயே சந்திரிகா மீண்டும் கட்சிக்குள் உள்வாங்கப்பட்டுள் ளார் என்று அந்தக் கட்சியின் வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேசமயம், கட்சியில் சந்திரிகாகவுக்கு வழங்கப்பட வுள்ள பதவி, அதிகாரங்கள் குறித்து இறுதித் தீர்மானம் எடுப்பதற்காக சுதந்திரக் கட்சி யின் நிறைவேற்று குழு, மத்திய குழு கூட்டங்கள் இன்று நடை பெறவுள்ளன என்றும் தெரிவிக் கப்பட்டது. (ஐ)

# நாட்டின் பொருளாதார விருத்திக்கு அனைவரின் பங்களிப்பும் அவசியம்

## ஜனாதிபதியின் தொழிற்சங்க பணிப்பாளர்

யாழ்ப்பாணம், ஜன. 08

நாட்டின் பொருளாதார அபிவிருத்திக்கு அனைத்துப் பிரஜைகளினதும் பங்களிப்பு அவசியமாகும் என்று ஜனாதி பதியின் தொழிற்சங்கப் பணிப் பாளர் சமன் ரத்னப்பிரிய தெரி வித்துள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரம சிங்கவின் வடக்கு, பயணத்தில் 12 மாற்றுத்திறனாளிகளுக்கு செயற்கை கால் வழங்கும் நிகழ்வு யாழ்ப்பாணத்தில் நடைபற்றது இதில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரி வித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கை யில்,

கடந்த முப்பது வருடங்க ளாக நீடித்த போர் காரணமாக, வடக்கில் உள்ள பலர் தமது சொத்துகளை இழந்தனர், காணிகளை இழந்தனர், அவயவங்களை இழந்தனர். வருமானமீட்டும் வழிகளை இழந்தனர்.

இதனால் தொடர்ச்சியாக அவர்கள் நெருக்கடிகளுக்கு முகங்கொடுக்கும் நிலைமை யொன்று ஏற்பட்டுள்ளது. இந்த நிலையில், அவர்களை தேசிய வேலைத்திட்டத்தில் பங்களிப் புச் செய்வதனை நோக்காக் கொண்டு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பல நடவடிக்கை களை முன்னெடுத்துள்ளார்.



குறிப்பாக, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாடு வங்குரோத்து அடைந்துவிட்ட தாக அறிவிக்கப்பட்ட தரு ணத்தில் அரசியல், சட்டம் ஒழுங்கு உள்ளிட்ட ஸ்திரமற்ற நிலைமைகள் காணப்பட்ட தரு ணத்தில் தான் தலைமையை ஏற்றுக்கொண்டார்.

பலத்த சவால்களுக்கு மத்தி யில் அந்த நிலைமைகளை நாடு கடப்பதற்கு நடவடிக்கைகளை எடுத்ததோடு, வரிசை யுகத்தி னையும் முடிவுக்கு கொண்டுவந் தார். தற்போது பொருளாதாரத் தினை மீட்டெடுக்கும் போராட் டத்தை ஆரம்பித்துள்ளார்.

இந்தப் பயணத்தில் அரசி யல், பேதங்கள், இன, மத, மொழி பேதங்கள் என்று அனைத்தை யும் கடந்து அனைத்து தரப்பி னரும் பங்களிப்பைச் செய்ய வேண்டும் என்று கருதுகின் றார். மாற்றுத்திறனாளிகளாக இருப்பவர்கள் கடந்த காலத் தில் பெரும் உழைப்பாளிகளாக இருந்தனர். அவர்களின் பங்க ளிப்பு கணிசமாக இருந்தது.

தற்போது அவர்களின் வரு மானத்தை பெருக்குவதற்கும் தமது பணிகளை ஆற்றுவதற் கும் ஏதுவான உதவிகளை அளிப்பதற்கு பல நடவடிக்கை கள் முன்னெடுக்கப்படுகின்றன. குறிப்பாக, சுயதொழில் செயற் பாடுகளை மேம்படுத்துவதில் அரசாங்கம் நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றது - என்றார். (ஐ)

# பொலிஸ் அதிகாரியை கடித்துவிட்டு தப்பிய சந்தேகநபருக்கு வலைவீச்சு!

கொழும்பு, ஜன. 08

சமிக்ஞையை மீறி மோட் டார் சைக்கிளில் பயணித்த வர் தன்னை மறித்த பொலிஸ் அதிகாரியின் கையை கடித்து விட்டு தப்பிச் சென்றுள்ளார். இவ்வாறு தப்பிச் சென்ற நபர் தொடர்பில் விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

சிலாபம் - புத்தளம் வீதி யில் உள்ள ஆராச்சிக்கட்டு - ஹலம்பவடவன பகுதியில் நேற்று முன்தினம் இரவு 10.45 மணியளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவம் தொடர்பில் மேலும் அறிய வருவதாவது, வீதி போக்குவரத்து கட மையில் இருந்த பொலிஸார் சமிக் ஞையை மீறிப் பய ணித்த ஒருவரை மறித்து அவ ரைக் கைது செய்ய முயன்ற னர். அப்போது, அவர் பொலிஸ் அதிகாரியின் கையை கடித்து விட்டு அங்கிருந்து தப்பிச் சென்றார்.

சந்தேகநபர் கடித்ததில் காயமடைந்த பொலிஸ் அதி காரி சிலாபம் பொது மருத் துவமனையில் சிகிச்சை பெற்று வெளியேறியுள்ளார்.

இந்நிலையில், சந்தேக நபரை கைது செய்வதற்கான நடவடிக்கைகளை பொலி ஸார் எடுத்து வருகின்றனர்.

# வெளிநாட்டு வேலைவாய்ப்பு எனக்கூறி ஏமாற்றியவர் கைது

கொழும்பு, ஜன. 08

வெளிநாட்டில் வேலை வாய்ப்பு பெற்றுத் தருவதாகக் கூறி 16 இலட்சம் ரூபாய் பணத்தை மோசடி செய்த நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள் ளார்.

களுத்துறை - பாணந்துறை யைச் சேர்ந்த 44 வயதான நபரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டார்.

குளியாப்பிட்டி குற்றப் புல னாய்வு பிரிவினருக்கு கிடைத்த முறைப்பாடுகளின் அடிப்படை யில் விசாரணைகளை முன் னெடுத்த பொலிஸார் சந்தேக நபரை கைது செய்துள்ளனர்.

இவர் வெளிநாட்டில் வேலை வாய்ப்பு தருவதாக கூறி 16 இலட்சத்து 19 ஆயிரம் ரூபாய் பணத்தை மோசடி செய் துள்ளார் என்று விசாரணை களில் தெரியவந்துள்ளது. (ஐ)

# அரசாங்கத்தை வீழ்த்துவதற்கான ஒரே தெரிவு ஐக்கிய மக்கள் சக்தியே!

**நாடாளுமன்ற உறுப்பினர் நாலக கொடஹேவா**

கொழும்பு, ஜன. 08

தற்போதைய அரசாங்கத்தை வீழ்த்து வதற்கு பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியில் இணைவதே எமக்குள்ள ஒரே தெரிவாகும் - இவ்வாறு தெரிவித் துள்ள சுதந்திர மக்கள் காங்கிரஸின் உறுப்பினரான கலாநிதி நாலக கொட ஹேவா, சுதந்திர மக்கள் காங்கிரஸின் உறுப்பினர்கள் தனித்தனியாக சுயாதீன மாகவே தீர்மானம் எடுத்தனர் என்றும் கூறினார்.

ஐக்கிய மக்கள் சக்தியுடன் கூட்டி ணையும் தீர்மானத்தை சுதந்திர மக்கள் காங்கிரஸ் எடுக்கவில்லை என்று அதன் தலைவரான டலஸ் அழகப்பெரும அறி வித்துள்ள நிலையிலேயே கொடஹேவா மேற்கண்டவாறு கூறினார்.

நாட்டில் மாற்றத்தை ஏற்படுத்தி ஜன நாயக பண்புகளுடனான நல்லாட்சியை உருவாக்குவதே எமது இலக்காக உள் ளது. அந்தவகையில் தேசிய பரப்பில் உள்ள அரசியல் அணிகளில் சிறந்த தரப் புடன் கைகோக்க வேண்டியது அவ சியம். அவ்வாறு கைகோக்காது விட் டால் எம்மால் தற்போதைய ஆட்சியை வீழ்த்த முடியாது. அந்தவகையில், தற்போதைய ஆட்சியை வீழ்த்துவதற் குள்ள ஒரே தெரிவு பிரதான எதிர்க்கட்சி யாகும்.

அந்தக் கட்சி தலைமையிலான பரந்து பட்ட கூட்டணியிலேயே நாம் இணைந் துள்ளோம். அவர்களுடன் இணைந்து மக்கள் எதிர்பார்க்கின்றன நல்லாட்சியை உருவாக்குவதே எமது இலக்காக உள் ளது.

அதுமட்டுமன்றி, நாட்டின் பொருளா தாரத்தை கட்டியெழுப்புவதாக இருந்தால் அது நிச்சயமாக அனைத்து சமூகங்களின தும் பங்களிப்புடன்தான் நடைபெறுவ தற் ணகான சாத்தியப்பாடுகள் உள்ளன.

அந்த வகையில் ஐக்கிய மக்கள் சக்தி தலைமையிலான பரந்துபட்ட அணியில் அனைத்து சமூகங்களின் பிரதிநிதிகளும் பங்கேற்றுள்ளனர். அதனடிப்படையில் தான் நாம் அக்கட்சியுடனான கூட்டில் இணைந்துள்ளோம் - என்றார்.

சுதந்திர மக்கள் காங்கிரஸின் 13 எம். பிக்களில் 6 எம். பிக்கள் ஐக்கிய மக்கள் சக்தியுடன் இணைந்துள்ளனர். இன்னும் இரண்டு எம். பிக்கள் விரைவில் இணைவர் என்றும் அவர் கூறினார். (ஐ)

## நாகபட்டினம்...

விலையை மேலும் குறைப்பது குறித்து இந்திய, இலங்கை அரசுகளிடம் பேசிக் கொண்டிருக்கிறோம். ஒரு வழிப் பயணத்திற்கான கட்டணத்தை 57.50 அமெரிக்க டொலர் (சுமார் 18,500)அளவுக்குக் குறைக்க விழைந்துள்ளோம்." என்று 'ஈழநாடு' இதழுக்கு நிரஞ்சன் நேற்று தெரிவித்தார்.

ஒவ்வொரு பயணியும் 60 கிலோ எடை கொண்டு செல்ல அனுமதிக்கப்படுவார் என்று அவர் கூறினார். "இந்தப் படகு சேவை, பாரதப் பிரதமர் நரேந்திர மோடியின் வலுவான ஆதரவைப் பெற்றிருப்பதுடன் இலங்கை அரசாலும் மனமார வரவேற்கப்படுவது சிறப்பு. அதற்கான காரணம்: யாழ் - தமிழக மக்களுக்கிடையேயான வலுவான தொடர்பை இது ஏற்படுத்தும்" என்றார் நிரஞ்சன்.

கடந்த ஆண்டு செப்ரெம்பர் மாதம் இந்தியக் கப்பல் துறை அமைச்சகத்துக்கு இந்தச் சேவை தொடங்கும் வழிகாட்டுதல்களை மோடி வழங்கியதாகக் குறிப்பிட்டார் அவர். முதலில், காரைக்காலிலிருந்து தொடங்குவதாக இருந்த இந்தச் சேவை, அங்குள்ள துறைமுகத்தில் இரும்பு மற்றும் நிலக்கரி போக்குவரத்துச் சுமை அதிகமிருப்பதால் அது பயணிகளின் ஆரோக்கியத்தை பாதிக்கலாம் என்பதால், இதை நாகைக்கு மாற்ற முடிவு செய்யப்பட்டதாக அவர் தெரிவித்தார். அதன்படி, கொச்சின்- இலட்சதீவுகள் இடையே இயங்கி வந்த 'செரியபாணி' என்ற படகுச் சேவை இந்த மார்க்கத்திற்கு மாற்றப்பட்டு ஒக் ரோபர் 14 அன்று அறிமுகப்படுத்தப் பட்டு, பருவ மழை காரணமாக அது விரைவில் நிறுத்தப்பட்டது. இலட்ச தீவு நிர்வாகம் 'செரியபாணி' கொச்சின் சேவைக்கு மீட்கப்படவேண்டும் என்ற கோரிக்கை வைத்ததையடுத்து அந்தப் படகு அங்கு திருப்பி அனுப்பப்பட்டது.

"இந்தச் சேவைக்கு ஒப்பந்தப் புள்ளிகளை அனுப்பிய ஆறு பேரில் நான் தேர்ந்தெடுக்கப்பட்டேன். அந்தமானில் சிறுசிறு தீவுகளுக்கிடையில் இயங்கி வந்த குறைந்த தொலைவு சேவைகளுக்குப் பயன்படுத்தப்பட்ட படகை வாங்கி எங்கள் கடல் சார் பொறியியலாளரை கொண்டு அதன் எந்திரம் மற்றும் இதர தொழில்நுட்ப அம்சங்களை ஆய்வு செய்தோம். அவர் பரிந்துரை செய்திருந்த சில மாற்றங்களையும் அதில் மேற்கொண்டோம். ஏனெனில், பயணிகளின் வசதியும் பாதுகாப்பும் எங்கள் உயர் முன்னுரிமையாகக் கருதினோம். அந்தப் படகு ஜனவரி 15 அந்தமானிலிருந்து வந்தடையும் என்று எதிர்பார்க்கிறோம். அதன் பிறகு இரண்டொரு நாட்களில் பயணச்சீட்டு முன்பதிவைத் தொடங்கத் திட்டமிட்டுள்ளோம். தை பிறந்தால் வழி பிறக்கும்" என்று தெரிவித்தார் நிரஞ்சன்.

முதலில் இந்தப் படகு 'சீ லிங்க்' என்று அந்தமானில் இருக்கும் அதன் உரிமையாளர்களால் பெயரிடப்பட்டதாகவும் ஆனால், தான், சிதம்பரம் கோயிலின் திருக்குளமான 'சிவகங்கை' என்று பெயரை மாற்ற முடிவு செய்ததாகவும் அவர் தெரிவித்தார். "நாகபட்டினம், பல இந்து, இஸ்லாமிய, கிறிஸ்தவ புனித தலங்களுக்கும் அருகியில் இருப்பதால் ரயில், பேருந்து போக்குவரத்துத் தொடர்புகள் அதிகமிருக்கும்" என்று கூறிய நிரஞ்சன், இந்தியாவில் அகமதாபாத் ஐ. ஐ. எம்- இல் பட்ட மேற்படிப்பு படிக்கும் முன்பு யாழ்ப்பாணம் இந்து கல்லூரியில் பயின்றவர்.

சிங்கப்பூரில் 'விளைபொருள்(Commodity) வர்த்தகராக' பல ஆண்டுகள் செயல்பட்டிருந்தார் அவர். வாரம் ஆறு நாட்கள் இந்தப் படகுச் சேவை இயக்கப்படும் என்றும் பராமரிப்புப் பணிகளுக்காக ஞாயிறு விடுமுறை அளிக்கப்படும் என்றும் நிரஞ்சன் கூறினார்.

பயணிகளுக்கான கட்டணக் குறைப்பு குறித்த இந்திய - இலங்கை அரசுகளுடனான பேச்சில் எந்த அளவுக்கு வெற்றி பெற முடியும் என்று கேட்கப்பட்டதற்கு அவர், "இந்திய அரசு இப்போது நிர்ணயித்திருக்கும் 18 சதவிகித ஜி. எஸ். டியிலிருந்து 5 சதவிகிதமாகக் குறைக்கக் கோரியிருக்கிறேன் விமானப் பயணச்சீட்டில் வெறும் 5 வீதமாகத்தான் ஜி. எஸ். டி. விதிக்கப்பட்டுள்ளது. புறப்படும் இடத்திலிருந்தான துறைமுகக் கட்டணத்தைத் தற்போதைய 5 டொலரிலிருந்து பாதியாகக் குறைக்குமாறு இலங்கை அரசை கோரியுள்ளேன். 80 அமெரிக்க டொலர் கட்டணத்தில் 30 சதவிகிதம் தற்சமயம் பல்வேறு வரிகள் மற்றும் துறைமுகக் கட்டணத்துக்குச் செல்கிறது. இவையெல்லாம் குறைக்கப்பட்டால், மக்களுக்குப் பயனளிக்கும். இந்த வரிகளையும் கட்டணங்களையும் இரு அரசுகளும் குறைக்கும் என்று நாங்கள் நம்புகிறோம்." என்றார் அவர்.

"எங்களது நியாயமான கோரிக்கைக்குப் பின்னால் இரண்டு முக்கிய அம்சங்கள் இருப்பதை நினைவில் கொள்ள வேண்டும். முதலாவதாக, இந்தப் பயணிகள், விமான கட்டணம் கட்டுப்படியாகாத சாமானியர்கள். இரண்டாவதாக, வட இலங்கையில் சீன ஆதிக்கம் அதிகரித்து வருவது குறித்த கவலை எழும் இத்தருணத்தில் இந்தப் படகுச் சேவை, யாழ். - தமிழக மக்களுக்கிடையேயான வலுவான தொடர்பை ஏற்படுத்தக்கூடியது" என்றார் நிரஞ்சன். (ஐ)

## சிறீதரன்...

செட்டிபாளையத்தில் நடைபெற்ற முன்னாள் பாராளுமன்ற உறுப்பின ரும் பட்டிருப்பு தொகுதி இலங்கை தமிழரசுக்கட்சி தலைவருமான பா. அரியநேத்திரன் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில், பாராளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியன், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஞா. சிறிநேசன், சீ. யோகேஸ் வரன் உட்பட கட்சி உறுப்பினர்கள் கலந்துகொண்டனர்.

இந்தக் கூட்டத்தில் பேசிய, யோகேஸ்வரன்,

தமிழரசு கட்சியின் தலைமை பதவிக்கு சிறீதரனே பொருத்தமானவர். அவருக்கு உறுப்பினர்கள் அனைவரும் ஆதரவு வழங்க வேண்டும் - என்றார்.

அங்கு உரையாற்றிய சிறீதரன் எம். பி., வடக்கு - கிழக்கு மண்ணில் தமிழர்களுக்கான ஆட்சி முறை அமைவதற்கு முழுமையான செயல்பாடுகளை தமிழரசுக் கட்சி முன்னெடுக்கும் - என்று கூறினார். (ஐ)

## புதிய...

நீதிமன்றம் செல்ல முடியும்.

தற்போது நடைமுறையில் உள்ள பயங்கரவாத தடைச் சட்டத்தில் காணப்படாத பல வித்தியாசமான அம்சங்கள் புதிய சட்டமூலத்தில் இடம்பெற்றுள்ளன. புதிய சட்டமூலத்தில் பாதுகாப்பு அமைச்சருக்கு தடுத்து வைப்பதற்கான உத்தரவை பிறப்பிக்கும் அதிகாரம் வழங்கப்படவில்லை.

அந்த அதிகாரம் பாதுகாப்பு அமைச்சின் செயலாளருக்கு வழங்கப்பட்டுள்ளது .அவர் பொலிஸ்மா அதிபரின் பரிந்துரையின் பேரில் இந்த உத்தரவை பிறப்பிப்பார். புதிய சட்டமூலத்தில் பொலிஸ் உத்தியோகத்தருக்கு வழங்கப்படுகின்ற வாக்குமூலங்கள் நீதிமன்றத்தில் ஏற்றுக்கொள்ளப்படாது.

பயங்கரவாதம் என்பதற்கான வரையறையையும் புதிய சட்ட மூலம் கொண்டிருக்கும். பயங்கரவாதம் என்பதற்கான சர்வதேச அளவிலான வரைவிலக்கணம் இல்லாததால் நாங்கள் எங்கள் வரைவிலக்கணத்தை முன்வைக்கின்றோம். அத்துடன், சந்தேகநபரை தடுத்துவைக்கக்கூடிய நாட்கள் தற்போது 90 ஆக காணப்படுகின்றன. இதனை 30 நாட்களாக புதிய சட்ட மூலம் குறைக்கின்றது - என்றும் கூறினார். (ஐ)

# வடக்குக்கு முன்னர் நான் வந்தபோது அரசியல் தீர்வுக்காகவே என்னை நாடுவர்!

### ஜனாதிபதி ரணில் சொல்கிறார்



யாழ்ப்பாணம், ஜன. 08

முன்னர் நான் வடக்குக்கு வரும் போதெல்லாம் என்ன பிரச்னை என்று கேட்டால் காணாமல் ஆக்கப்பட்டோர் பிரச்னை, அரசியல் தீர்வு என ஒரு சில பிரச்னைகளுடனேயே என்னை அணுகினார்கள். இதனை விடுத்து, நாம் முன்னோக்கி செல்வதற்கு என்ன செய்யலாம் என்பது பற்றியே நான் ஆராய்கிறேன்.

இவ்வாறு தெரிவித்துள்ளார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க.

நேற்றைய தினம் யாழ்ப்பாணத்தில் ஐக்கிய தேசியக் கட்சியினரை சந்தித்த போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், நம் அனைவருக்கும் உள்ள மிகப்பெரிய சவால் பொருளாதார மேம்பாட்டை ஏற்படுத்துவது. அத்தோடு வட பகுதியில் உள்ள வளங்களை பயன்படுத்தி பொருளாதாரத்தை எவ்வாறு மேம்படுத்தலாம் என்பது தொடர்பில் ஆராய்ந்து வருகின்றோம் - என்றார். (தொடர்புடைய செய்தி பக்கம் 5இல்)

## திருமலையில்...

தங்க வைக்கப்பட்டுள்ளனர் என்று இடர் முகாமைத்துவ மத்திய நிலைய பிரதி பணிப்பாளர் கே. சுகுணதாஸ் தெரிவித்துள்ளார்.

இடம்பெயர்ந்த மக்களை கிழக்கு ஆளுநர் ஆளுநர் செந்தில் தொண்டமான், திருகோணமலை மாவட்ட அரசாங்க அதிபர் சமிந்த ஹெட்டியாராச்சி, திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கபில நுவன் அத்துகோரள ஆகியோர் நேற்று படகுகளில் சென்று சந்தித்து தேவையான உதவிகளையும் வழங்கினர். (ஐ)

## போதைக்காக...

நடமாடிய இருவர் கைது செய்யப்பட்டனர். அவர்களில் ஒருவர் யாழ். நகரின் பிரபல மருந்தகத்தின் ஊழியர் என விசாரணையில் தெரியவந்தது.

அதனடிப்படையில் மருந்தகத்தில் முன்னெடுக்கப்பட்ட தேடுதலில் மேலும் இரண்டு பெட்டிகளில் சுமார் 250 போதை மாத்திரைகள் கைப்பற்றப்பட்டன. இந்த மாத்திரைகள் அதிக விலைக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளன.

சந்தேக நபர்கள் இருவரும் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள் ளனர். சந்தேக நபர்கள் மீதும் மருந்தகம் மீதும் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படும்". என்று பொலிஸார் கூறினர். (ஐ-03)

## பாராளுமன்ற...

நிலையிலேயே ஜனாதிபதி ரணில், நாளை செவ்வாய்க்கிழமை முதல் 12 ஆம் திகதி வெள்ளிக்கிழமை இடம்பெறவுள்ள இந்த வருடத்துக்கான கன்னி அமர்வுகளுடன் பாராளுமன்ற அமர்வுகளை ஒத்திவைக்க தீர்மானித்துள்ளார்.

சர்வதேச பொருளாதார மாநாடு மற்றும் அணிசேரா நாடுகளின் மாநாடு ஆகியவற்றில் பங்கேற்பதற்காக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இந்த வார இறுதியில் சுவிற்சர்லாந்து, உகண்டா ஆகிய நாடுகளுக்கு செல்கின்றார். இந்த நாடுகளுக்கான பயணத்தை நிறைவு செய்து நாடு திரும்பியதும் பாராளுமன்றத்தை ஒத்திவைப்பதற்கான அறிவிப்பை வெளியிடுவர் என்று ஜனாதிபதி பணிமனையின் பேச்சாளர் ஒருவர் குறிப்பிட்டார். (ஐ)

## அனைத்துக்...

நேற்று நடைபெற்ற செய்தியாளர் நடந்த சந்திப்பிலேயே இதனைத் தெரிவித்தார்.

ஜனாதிபதி வந்து சென்ற பின்னர் வவுனியா புதிய பஸ் நிலையத்தில் இராணுவ முகாம் ஒன்று புதிதாக அமைக்கப்பட்டுள்ளது. அது என்ன தேவைக்காக அமைக்கப்பட்டது என்ற விடயம் தெரியவில்லை. எமது மக்களை அச்சுறுத்துவதற்கான செயல்பாடே அது. ஏற்கனவே பொலிஸ் சோதனைச் சாவடி அங்கு இருக்கின்றது. இந்நிலையில், இராணுவத்தின் தேவை என்ன என்று புரியவில்லை. இது தொடர்பாக நாம் பாராளுமன்றிலும் ஜனாதிபதியிடமும் பேசுவோம். இது அகற்றப்பட வேண்டிய முகாம். சிவில் நிர்வாகம் என்பது பொலிஸாரிடம்தான் ஒப்படைக்கப்பட வேண்டும்.

ஜனாதிபதியின் வவுனியா வருகையின்போது காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் தமது ஆதங்கத்தைப் போராட்டத்தின் மூலம் வெளிப்படுத்தினர். இதன்போது கைது நடவடிக்கை இடம்பெற்றிருந்தது. காணாமல் ஆக்கப்பட்டோர் உறவுகளின் சங்கத்தின் தலைவர் கைது செய்யப்பட்டார். இது கண்டிக்கப்பட வேண்டிய விடயம். தமது உறவுகளைத் தேடி பல வருடங்களாகப் போராடி வரும் ஒருவரை ஜனாதிபதிக்கு எதிரான போராட்டமாகப் பார்க்காது அவர் விடுதலை செய்யப்பட வேண்டும் என்பது எங்களின் கோரிக்கை.

இது ஒரு தேர்தல் ஆண்டு. ஜனாதிபதித் தேர்தலா? அல்லது பாராளுமன்றத் தேர்தலா? எனப் பேசப்பட்டு வருகின்றது. ஜனாதிபதி தேர்தல் தொடர்பாகப் பல ஊகங்கள் பேசப்படுகின்றன. வடக்கு - கிழக்கில் எமது மக்களின் பிரச்னைகள் தீர்க்கப்படாத சூழலில் இந்தத் தேர்தலைக் கையாளும் விதம் தொடர்பாக நாம் சிந்திக்க வேண்டும். அனைத்து கட்சிகளும் சிவில் அமைப்புகளும் இணைந்து ஒரு பொதுவேட்பாளரை நிறுத்துவது தொடர்பாக நாம் பரிசீலிக்கவேண்டும்.

எமது கோரிக்கைகளை சிங்கள வேட்பாளர்கள் ஏற்றுக்கொள்ளக்கூடிய நிலையை நாம் உருவாக்க வேண்டுமானால் இந்த முயற்சியே பலனளிக்கும் என்று நான் நினைக்கின்றேன். இந்த ஒற்றுமை சாத்தியமா என்ற கேள்வி இருக்கின்றது. இதில் பல கட்சிகள் தங்களது கருத்துகளை சொல்லியிருக்கிறார்கள். அதுபோல் கஜேந்திரகுமார் பொன்னம்பலமும் இந்தத் தேர்தலை பகிஷ்கரிக்க வேண்டும் என்ற தனது கருத்தை சொல்லியிருக்கின்றார். தமிழரசு கட்சி இன்னும் முடிவை அறிவிக்கவில்லை. இருந்தாலும் இடைமட்ட தலைவர்கள் பொதுவான கருத்துக்களை சொல்லிக் கொண்டு இருக்கின்றார்கள். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, சிவில் அமைப்புகளுடனும், தேசிய கட்சிகளுடனும் பேசி ஓர் ஒற்றுமையான முடிவுக்கு வருவது சாலச்சிறந்ததாக இருக்கும். இந்த ஒற்றுமை சாத்தியமா என்ற கேள்வி இருந்தாலும், சிவில் அமைப்புகள், தமிழரசு கட்சி என்பவற்றுடன் பேச வேண்டியுள்ளது. கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தின் கட்சியுடனும் பேசுவதற்கான முயற்சியை நாம் மேற்கொள்வோம். அந்தவகையில் முழுமையாக எடுக்கும் முடிவே சாத்தியமாகும். தென்னிலங்கை வேட்பாளர்கள் யாராக இருந்தாலும் அவர்களை ஒரு நிபந்தனைக்கு உட்படுத்த வேண்டும்". என்றார் (ஐ)

ஈழநாடு
Eelanadu

## கிண்ணியாவில் வெள்ளத்தால் 250 ஏக்கர் நெல் பயிர்கள் அழிவு

திருகோணமலை, ஜன. 08

கிண்ணியாவில் 250 ஏக்கருக்கு மேற்பட்ட வயல் நிலங்கள் வெள்ளத்தில் மூழ்கி அழிவடைந்தன.

திருகோணமலை - கிண்ணியாவில் தொடர் மழை காரணமாக கண்டக்காடு, மயிலப்பஞ்சேனை, சோலை வெட்டுவான் பகுதிகள் வெள்ளத்தில் மூழ்கின.

பராக்கிரமபாகு சமுத்திரம், மகாவலி, கந்தளாய் குளம் முதலான பல குளங்களின் வான்கதவுகள் திறக்கப் பட்டதால் வெள்ளப்பெருக்கு அதிகரித்தது.

இந்த நிலையில், கிண்ணியா பிரதேச செயலர் பிரிவில் 250 ஏக்கர் வயல் நிலங்கள் வெள்ளத்தில் மூழ்கி அழிவடைந்தன என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## இலங்கை இளைஞர்கள் குழந்தை பெறுவதில் ஆர்வம் காட்டவில்லை!

### ஆய்வில் வெளியானது தகவல்

கொழும்பு, ஜன. 08

நாட்டில் புதிதாக திருமணம் செய்து கொள்ளும் இளைஞர்கள் குழந்தை பெற்றுக் கொள்வதில் ஆர்வம் காட்டவில்லை என்று ஆய்வு ஒன்றில் தெரியவந்துள்ளது.

அத்துடன், திருமணம் செய்யாமல் இணைந்து வாழும் (இளைஞர்களின் எண்ணிக்கையும் அதிகரித்துள்ளது.

மக்கள் தொகைக் கணக்கெடுப்பு மற்றும் புள்ளி விபரத் திணைக்களத்தின் தகவலின் படி, 2012ஆம் ஆண்டு முதல் 2023ஆம் ஆண்டு ஜூன் மாதம் வரையிலான தரவுகளை அவதானிக்கும் போது, ஒரு இலட்சத்துக்கும் குறைவான புதிய பிறப்புகள் பதிவாகியுள்ளதாக தெரிவிக்கப்பட் டுள்ளது.

2013 ஆம் ஆண்டிலிருந்து, 2023 ஆம் ஆண்டு வரை இலங்கையில் புதிதாகப் பிறந்த குழந்தைகளின் எண்ணிக்கையில் விரைவான குறைவு தென்படுகின்றது.

இதேவேளை, 2013ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2023ஆம் ஆண்டில் 83 ஆயிரத்து 530இனால் புதிய பிறப்புகள் குறைந்துள்ளதாகவும் 2013ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2022ஆம் ஆண்டில் 62 ஆயிரத்து 587இனால் புதிய பிறப்புப் பதிவுகள் குறைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2013 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2021 ஆம் ஆண்டு பிறப்புப் பதிவு 57 ஆயிரத்து 32ஆக குறைந்துள்ளதாக மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தெரிவு செய்யப்பட்ட இடங்களில் சோதனை ஏன் நடைபெறவில்லை

### ஹிருணிகா கேள்வி

கொழும்பு, ஜன. 08

யுக்திய நடவடிக்கையின் உண்மைத்தன்மை குறித்து கேள்வி எழுப்பிய முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஹிருணிகா பிரேமச்சந்திர, போதைப்பொருள் கடத்தல் காரர்களை கைது செய்வதற்கான சோதனைகள் தெரிவு செய்யப்பட்ட பிரதேசங்களில் நடத்தப்படுவதில்லை என குற்றம் சுமத்தியுள்ளார்.

போதைப்பொருள் கடத்தலில் ஈடுபடும் அரசியல் வாதிகள் இருப்பது அனைவரும் அறிந்ததே. அவர்களில் சிலர் தெமட்டகொட போன்ற பிரதேசங்களில் செயற் படுகின்றனர். பாதாள உலகக் குழுத் தலைவர் ஒருவரால் பதில் பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னகோனுக்கு வாழ்த்து பலகை அமைக்கப்பட்டுள்ளது. இது எப்படி? ஏன்? இந்த பகுதிகளில் போதைப் பொருட்களை மீட்கும் நடவடிக்கைகள் தொடங்கப்படவில்லையா?” என்று கேள்வி எழுப்பினார்.

“எனது தந்தை பாரத லக்ஷ்மன் பிரேமச்சந்திரவை சுட்டுக் கொன்ற மற்றவர்களுடன் தேசபந்து பின்னால் வாகனத்தில் இருந்தார்” என்று ஹிருணிகா பிரேமச் சந்திர ஊடகங்களுக்கு தெரிவித்தார். (ஐ)

# பொருளாதார நெருக்கடி காரணமாக 60 வீதத்தினரின் வருமானம் குறைந்தது

கொழும்பு, ஜன. 08

**பொருளாதார நெருக்கடியால் 2022 மார்ச் மாதத்திலிருந்து இலங்கையில் 34 இலட்சத்து 48 ஆயிரம் குடும்பங்களின் வருமானம் குறைந்துள்ளதாக சனத்தொகை மற்றும் புள்ளிவிபர திணைக்களத்தின் அறிக்கைகள் வெளிப்படுத்துகின்றன என்று பேராதனை பல்கலைக்கழகத்தின் பொருளாதாரம் மற்றும் புள்ளி விபரவியல் பேராசிரியர் வசந்த அத்துகோரள தெரிவித்துள்ளார்.**

அதன்படி, மொத்த குடும்ப அலகுகளில் 60.5 வீதத்தினரின் வருமானம் குறைந்துள்ளதாக அவர் கூறினார்.

பெருந்தோட்டத் துறையில் வருமானம் அதிகம் குறைந்துள்ளது. கிட்டத்தட்ட ஒரு இலட்சத்து 70 ஆயிரம் குடும்பங்களின் வருமானம் குறைந்துள்ளது. இரண்டாவதாக, கிராமப்புற மக்களின் வருமானம் அதிக வீழ்ச்சியைக் காட்டுகிறது.

கிராமப்புறங்களில் கிட்டத் தட்ட 45 இலட்சம் குடும்பங்கள் இருக்கின்றன. இதில், 27 இலட்சம் குடும்பங்களின் வருமானம் குறைந் துள்ளது.

நாட்டின் நகர்ப்புற மக்கள் தொகை சுமார் 36 இலட்சம் இதில், ஏறக்குறைய 9 இலட்சத்து 50 ஆயிரம் குடும்பங்கள் இருக்கின்றன. இதில் 5 இலட்சம் குடும்பங்கள் வருமானத்தில் சரிவைக் காட்டுவதாகவும் பேராசிரியர் மேலும் தெரிவித்துள்ளார். (ஐ)

# ஜனாதிபதி ரணிலின் வடக்கு வருகை வரி பணம் வீணான வெற்றுப்பயணமே

### யாழ்ப்பாணத்தில் வைத்து சாடியது ஜே. வி. பி.

யாழ்ப்பாணம், ஜன. 08

ஜனாதிபதியின் வடக்கு வருகை - மக்களின் பிரச்னை தீர்க்கப்படாத - மக்களின் வரிப்பணத்தை வீணடித்த வெற்றுப் பயணமாகவே வடக்கு மாகாண பயணம் அமைந்துள்ளதாக மக்கள் விடுதலை முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் பிமல் ரட்ணாயக்க தெரிவித்தார்.

தேசிய மக்கள் சக்தியின் யாழ்ப்பாண பணிமனையில் அவர் நேற்று நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில், யுத்தத்தில் பாதிக்கப் பட்ட வடக்கு மக்களின் அடிப்படை வசதிகள் இன்னும் பூர்த்தி செய்யாத வகையில் வாழ்ந்து கொண்டிருக்கின் றார்கள். காணி விடுவிப்பு, மீள்கட்டுமானம் காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கான தீர்வு, மற்றும் அரசியல் பிரச் னைக்கான தீர்வு என தமிழ் மக்கள் பல்வேறு கோரிக்கை களை முன்வைத்து போராட்டம் நடத்தி வருகின்றனர்.

இவ்வாறான ஒரு நிலையில் வட மாகாணத்துக்கு வந்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஒரு துண்டு காணி யேனும் அந்த மக்களுக்கு விடுவித்துக் கொடுக்க வில்லை. நான் கொழும்பிலிருந்து வருகை தரும்போது வடக்கு அதிகாரிகள் சிலருடன் கதைத்தேன். ஜனாதி பதியின் வருகை எவ்வாறு இருந்தது என்று கேட்டதற்கு, அவர்கள் கூறினார்கள் வாகனப் பவனியை கண்டு இரசித்ததாகக் கூறினார்கள்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் யாழ்ப்பாண வருகையை எதிர்த்து யாழ் மாவட்ட செயலகத்துக்கு அருகாமையில் போராட்டம் நடைபெற்றது. ஜனநாயக வழியில் தமது எதிர்ப்பை தெரிவித்த போராட்டக் காரர் களை பொலிஸார் இழுத்துச் சென்றதையும் தாக்குத லுக்கு தயாராக இருந்த பொலிஸாரையும் ஊடகங்களின் ஊடாகப் பார்த்தேன்.

நாட்டை அதலபாதாளத்துக்குக் கொண்டு சென்ற முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை ஜனா திபதி கதிரையிலிருந்து மக்கள் விரட்டியடித்தபோது ரணில் விக்கிரமசிங்க பின் கதவால் ஜனாதிபதியானார்.

நாட்டை முன்னேற்றப் போகிறேன் என கூறிக் கொண்டு நாட்டு வளங்களை வெளிநாட்டுக்கு தாரை வார்க்கும் செயல்பாட்டில் ரணில் விக்கிரமசிங்க ஈடு பட்டு வருகிறார்.

ஜனாதிபதி கதிரையில் மீண்டும் அமர்வதற்காக தமிழ் மக்களின் வாக்குகளை பெறுவதற்கு மக்களின் பிரச்சி னைகளுக்கு தீர்வு வழங்காது வடக்குக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ளார். வட மாகாணத்தின் வளமிக்க பகுதிகளான மன்னார், பூநகரி, தீவகம் போன்ற பகுதிகள் வெளிநாடுகளுக்கு விற்பனை செய்யப்பட்டிருக்கும் நிலையில் அந்தப் பிரதேச மக்களின் கோரிக்கைக்கு ஜனாதிபதி பதிலளிக்கவில்லை - என்றும் கூறினார். (ஐ)

# மடு மாதாவின் திருப்பயணம் நேற்று முதல் ஆரம்பமானது!

மன்னார், ஜன. 08

மடு மாதாவுக்கு மணிமுடி சூடிய நூற்றாண்டு விழாவை முன்னிட்டு மடு மாதாவின் திருச்சொரூபத்தை மன்னார் மறை மாவட்ட பங்குகளுக்கு கொண்டு செல்லும் திருப்பயணம் நேற்று ஆரம்பமானது.

1924ஆம் ஆண்டு கொழும்பு, இந்தியாவிலிருந்து வந்த ஆயர்கள் மடு அன்னைக்கு முடி சூட்டினர். இந்த தினத்தை முன்னிட்டு ஒவ்வொரு 25ஆவது ஆண்டும் மன்னார் மறை மாவட்ட பங்குகளின் ஆலயங்களுக்கு மாதாவின் திருச் சொரூப திருப்பயணம் நடைபெறுகிறது.

இதற்கமைய, 100ஆவது ஆண்டை முன்னிட்டு இந்த ஆண்டு திருப்பய ணம் நேற்று ஆரம்பமானது. “மரி அன்னையோடு நம்பிக்கையின் திருப்பயணிகளாகும்“ என்ற தொனிப் பொருளில் மக்களின் தேவைகள் நிறைவேறப் படவும் . நாட்டில் அமைதியான சூழ்நிலை உருவாகவேண்டும் என்றும் சமாதா னத்துக்கான ஒரு திருப்பயணமாக இது அமைவதாக மன்னார் திரு அவை தெரிவித்து.

நேற்றைய தினம் மடு மாதாவின் திருச்சொரூபம் மன்னார் புனித செபஸ்தியார் பேராலயத்துக்கு பவனியாகக் கொண்டுசெல்லப்பட்டது. மாதாவின் திருச்சொரூபம் இன்று காலை 8 மணிவரை அங்கு வீற்றிருக்கும்.

இன்றைய தினம் ஏனைய பங்குகளுக்கான பயணம் ஆரம்பமாகும். நேற்றைய திருப்பயணத்தில் பல்லாயிரக்கணக்கான மக்கள் மாதாவை தரிசித்து அருள் பெற்றனர். (ஐ)





இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 08.01.2024 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# மாலைதீவு அதிபர் இந்தியாவை விட்டு சீனாவுக்கு செல்வது ஏன்?

மாலைதீவின் புதிய அதிபர் முய்சு இந்த மாதம் சீனாவிற்கு அதிகாரபூர்வமான பயணம் மேற்கொள்ளவிருக்கிறார் என சீனா தெரிவித்துள்ளது.

இந்த ஐந்து நாள் பயணத்தை உறுதி செய்த சீன வெளியுறவு அமைச்சகம், அவரது பயணத்திற்கான தேதிகளையும் அறிவித்துள்ளது.

அதிபராக பதவியேற்ற பிறகு வெளிநாட்டுக்கு அவர் மேற்கொள்ளும் முதல் அரசுமுறை பயணம் இது என்கிறது சீனா.



இதுகுறித்து வெளியுறவு அமைச்சக செய்தித் தொடர்பாளர் ஹுவா சுன்யிங் கூறுகையில், “மாலத்தீவு அதிபர் முய்சு, சீன அதிபர் ஷி ஜின்பிங்கின் அழைப்பின் பேரில் ஜனவரி 8 முதல் 12ஆம் தேதி வரை சீனாவுக்குப் பயணம் மேற்கொள்கிறார், எனத் தெரிவித்தார். மாலத்தீவு அதிபர் அலுவலகமும் இந்தப் பயணத்தை உறுதிப்படுத்தியுள்ளது.

அதிபர் முகமது முய்சுவின் மாலத்தீவின் முற்போக்குக் கட்சியில் சீனாவுக்கு அதிக செல்வாக்கு இருப்பதாகக் கருதப்படுகிறது. அதிபர் தேர்தல் பிரசாரத்தின் போது, அவரது கட்சி “இந்தியாவை வெளியேற்றுவோம்” என்ற முழக்கத்தை முன்வைத்துப் பிரசாரம் மேற்கொண்டதுடன் மாலத்தீவில் இந்திய ராணுவத்தினர் இருப்பதை முடிவுக்குக் கொண்டு வரப் போவதாகவும்கூறியது.

இதைத் தொடர்ந்து, இந்திய அரசின் சார்பில் பதவியேற்பு விழாவில் கலந்து கொண்ட புவி அறிவியல் அமைச்சர் கிரண் ரிஜிஜூவுடன் அவர் நேரில் சந்தித்துப் பேசியபோது, இந்த விவகாரம் குறித்து முறைப்படி பேச்சு நடத்தினார்.

### முய்சுவின் வருகை குறித்து சீனா என்ன கூறியது?

ஜனவரி 5, வெள்ளிக்கிழமை நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில், சீன வெளியுறவு அமைச்சக செய்தித் தொடர்பாளர் வாங் வென்பின், முகமது முய்ஸுவின் வருகை பற்றிய கூடுதல் தகவல்களைத் தெரிவித்தார்.

சின் ஹுவா செய்தி நிறுவனத்தின் கேள்விக்கு பதிலளித்த அவர், “மாலத்தீவு






அதிபர் முகமது முய்சுவுக்கு அதிபர் ஷி ஜின்பிங் வரவேற்பு விழா நடத்துவார். அவரை வரவேற்கும் விதமாக விருந்து நிகழ்ச்சி ஒன்றை நடத்துவார்,” என்றார்.

“இரு நாட்டு தலைவர்களும் பரஸ்பர ஒத்துழைப்பு தொடர்பாக விவாதிப்பார்கள். இந்த காலகட்டத்தில் பல முக்கிய ஒப்பந்தங்களும் கையெழுத்திடப்படும்.”

“அதிபரைத் தவிர, சீனப் பிரதமர் லி சியாங் மற்றும் தேசிய மக்கள் காங்கிரஸின் நிலைக்குழுத் தலைவர் ஜாவோ லெஜி ஆகியோரும் அவரை முறைப்படி சந்திப்பார்கள்.”

சீனாவிற்கும் மாலத்தீவிற்கும் இடையிலான உறவுகள் குறித்தும் வாங் வென்பின் வலியுறுத்தினார். மேலும் இரு நாடுகளுக்கும் இடையிலான உறவுகள் மிகவும் பழமையானவை என்றும் அவர் கூறினார்.

“இரண்டு நாடுகளுக்கும் இடையிலான ராஜதந்திர உறவுகள் 52 ஆண்டுகளுக்கு முன்பு தொடங்கின. அன்றிலிருந்து, இருநாட்டு உறவுகளில் பரஸ்பர மரியாதை மற்றும் ஒத்துழைப்பு தொடர்ந்து நீடித்து வருகிறது. இது வெவ்வேறு அளவில் இரு நாடுகளுக்கு இடையிலான சமத்துவம் மற்றும் பரஸ்பர நலன்களுக்கு ஒரு எடுத்துக்காட்டு.”

2014 ஆம் ஆண்டில், அதிபர் ஷி ஜின்பிங் மாலத்தீவுக்கு பயணம் செய்ததாகவும் அவர் கூறினார். “அப்போது, இரு நாடுகளுக்கும் இடையிலான நட்பு மற்றும் ஒத்துழைப்பை அதிகரிப்பது குறித்தும், எதிர்கால நலன்களை நோக்கமாகக் கொண்டும் பேச்சுகள் நடந்தன.”

தொடர்ந்து பேசிய அவர், “கடந்த பத்தாண்டுகளில், மாலத்தீவு சீனாவின் ‘பெல்ட் அண்ட் ரோடு’ திட்டத்தில் பங்கேற்றதன் மூலம் இரு நாடுகளுக்கிடையேயான நட்புறவு ஆழமடைந்துள்ளது,” என்றார்.

### சீன வெளியுறவு அமைச்சகத்தின் அதிகாரப்பூர்வ அறிவிப்பு

முய்சுவின் சீனப் பயணம் குறித்து வாங் வென்பின் மேலும் கூறுகையில், “மாலத்தீவு அதிபரான பிறகு முய்சுவின் முதல் அதிகாரப்பூர்வ வெளிநாட்டுப் பயணம் இதுவாகும்,” என்றார்.

இருப்பினும், இதற்கு முன்னர் முய்சு துருக்கி நாட்டுக்கு அதிகாரப்பூர்வப் பயணம் மேற்கொண்டிருந்தார். மாலத்தீவு அதிபர் அலுவலகத்தின் தகவலின்படி, துருக்கி அதிபர் ரெசெப் தையிப் எர்துவானின் அழைப்பின் பேரில் முய்சு மற்றும் அவரது மனைவி ஆகியோர் கடந்த ஆண்டு நவம்பர் மாதம் துருக்கிக்கு பயணம் மேற்கொண்டனர்.

பரஸ்பர நலன் மற்றும் ஒத்துழைப்பை அதிகரிப்பது குறித்து அப்போது இருவருக்கும் இடையே விவாதம் நடந்தது. துபாயில் நடைபெற்று வந்த ஐக்கிய நாடுகளின் காலநிலை மாற்ற மாநாட்டில் பங்கேற்றுவிட்டு (கோப் 28) முய்சு துருக்கி நாட்டுக்குச் சென்றார்.

அங்கு அவர் இந்திய பிரதமர் நரேந்திர மோதியை முறைப்படி சந்தித்து பேசினார். அப்போது, இருதரப்பு உறவுகள் மற்றும் இருதரப்பு விவகாரங்கள் குறித்து பேசப்பட்டது.

இந்த சுற்றுப்பயணத்தில் இருந்து திரும்பியதும், மாலத்தீவில் உள்ள வேலனா விமான நிலையத்தில் செய்தியாளர் சந்திப்பை நடத்திய முய்சு, மாலத்தீவு மக்களின் விருப்பத்தை வரவேற்பதாகவும், தங்கள் வீரர்களை இந்தியாவுக்கு திரும்ப அழைப்பதாக இந்திய அரசு உறுதியளித்துள்ளதாகவும் கூறினார்.

கடந்த ஆண்டு, சீனாவின் யுனான் மாகாணத்தில் உள்ள குன்மிங்கில், “சீனா-இந்தியப் பெருங்கடல் பிராந்திய வளர்ச்சி ஒத்துழைப்புக்கான மன்றக் கூட்டம்“ ஏற்பாடு செய்யப்பட்டது. இதில், மாலத்தீவு சார்பில் அதிபருக்குப் பதிலாக, துணை அதிபர் ஹுசைன் முகமது லத்தீப் பங்கேற்றார் .

### மாலத்தீவுடனான சீனாவின் உறவுகள்

சீனாவிற்கும் மாலத்தீவுக்கும் இடையிலான ராஜதந்திர உறவு 1972 ஆம் ஆண்டு தொடங்கியது.

இதற்குப் பிறகு, மாலத்தீவு 2009 இல் சீனாவில் தனது தூதரகத்தையும், சீனா 2011 இல் மாலத்தீவில் தனது தூதரகத்தையும் திறந்தது.

2014 ஆம் ஆண்டில், மாலத்தீவுக்கு சீனா 16 மில்லியன் டாலர் நிதி உதவி வழங்கியது. இந்த ஆண்டு, மாலத்தீவு சீனாவின் ‘பெல்ட் அண்ட் ரோடு’ திட்டத்தில் இணைந்தது.

2017 இல், மாலத்தீவு சீனாவுடன் தடையற்ற வர்த்தக ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டது.

முகமது முய்சுவின் மாலத்தீவின் முற்போக்குக் கட்சியில் சீனாவுக்கு அதிக செல்வாக்கு இருப்பதாகக் கருதப்படுகிறது. அதிபர் தேர்தல் பிரசாரத்தின் போது, அவரது கட்சி “இந்தியாவை வெளியேற்றுவோம்“ என்ற முழக்கத்தை முன்வைத்ததுடன் மாலத்தீவில் நிலைகொண்டிருந்த இந்திய வீரர்களை திரும்பப்பெறுமாறும் இந்தியாவைக் கேட்டுக்கொண்டது.

முன்னதாக, மாலத்தீவு ஜனநாயகக் கட்சியுடன் தொடர்புடைய மாலத்தீவு முன்னாள் அதிபர் முகமது இப்ராகிம் சோலி, ‘இந்தியாவுக்கு முன்னுரிமை’ என்ற முழக்கத்தை முன்வைத்திருந்தார். அவர் இந்தியாவுக்கு நெருக்கமானவராகவும் கருதப்படுகிறார்.

2018ல், இப்ராகிம் சோலி மாலத்தீவு அதிபராகப் பதவியேற்ற போது, பிரதமர் நரேந்திர மோதி அந்த விழாவில் கலந்து கொண்டார்.

அவரது ஆட்சியின் போது, மாலத்தீவு கடந்த ஆண்டு “இந்தியப் பெருங்கடல் பிராந்திய மன்ற பேச்சுவார்த்தையில்” பங்கேற்க மறுத்துவிட்டது .

### முய்சுவின் தேர்தல் வெற்றிக்குப் பிறகு நடந்தது என்ன?

30 செப்டம்பர் 2023 - தேர்தலில் 46 சதவீத வாக்குகளுடன் வெற்றி பெற்று நாட்டின் புதிய அதிபராக முய்சு தேர்ந்தெடுக்கப்பட்டார்.

17 நவம்பர் 2023 - பதவிப் பிரமாணம் எடுத்துக்கொண்டு மாலத்தீவின் 8வது அதிபரானார்.

17 நவம்பர் 2023 - மாலத்தீவில் இருந்து இந்தியப் படைகளை அகற்றுவது தொடர்பாக கிரண் ரிஜிஜூவிடம் பேசினார்.

26 நவம்பர் 2023 - தனது முதல் அதிகாரப்பூர்வ வெளிநாட்டுப் பயணமாக துருக்கி நாட்டுக்குப் பயணம் மேற்கொண் டார். சில நாட்களுக்குப் பிறகு, டிசம்பர் 10 அன்று, துருக்கியுடனான இருதரப்பு உறவுகளை மேம்படுத்துவ தற்காக மாலத்தீவு அங்காராவில் தனது தூதரகத்தைத் திறக்கும் என்று அறிவித்தார்.

30 நவம்பர் 2023 - கோப் 28 இல் பங்கேற்க துபாய், ஐக்கிய அரபு எமிரேட்ஸ் சென்றடைந்தார்.

01 டிசம்பர் 2023 - துபாயில், COP 28இல் பங்கேற்க வந்திருந்த இந்தியப் பிரதமர் நரேந்திர மோதியை முய்சு சந்தித்தார்.

03 டிசம்பர் 2023 - ஐக்கிய அரபு எமிரேட்ஸுக்கான அதிகாரப்பூர்வ பயணத்தை முடித்துககொண்டு மாலத்தீவுக்குத் திரும்பினார்.

### இந்தியா - மாலத்தீவு உறவு எப்படி?

மாலத்தீவை சுதந்திர நாடாக அங்கீகரித்த முதல் நாடுகளில் இந்தியாவும் ஒன்று.

1965 இல், இந்தியா மாலத்தீவில் தனது அதிகாரப்பூர்வ உறவுகளைத் தொடங்கி, அவ்வாறு செய்த முதல் நாடு என்ற இடத்தைப் பெற்றது. ஆனால் அடுத்தடுத்த ஆண்டுகளில், மாலத்தீவின் அரசாங்கங்கள் இந்தியாவை நோக்கி அல்லது சீனாவை நோக்கி சாய்ந்தன.

இந்த சிறிய தீவின் பாதுகாப்பில் இந்தியா முக்கியப் பங்காற்றியுள்ளது. 1988இல் ராஜீவ் காந்தி ராணுவத்தை அனுப்பி மௌமூன் அப்துல் கயூமின் அரசைக் காப்பாற்றினார்.

கடந்த 2018ஆம் ஆண்டு மாலத்தீவு மக்கள் குடிநீர் பிரச்னையை எதிர்கொண்ட போது, பிரதமர் மோடி தண்ணீரை அனுப்பி வைத்தார். இதற்குப் பிறகு மோடி அரசும் மாலத்தீவை பொருளாதார நெருக்கடியில் இருந்து மீட்பதற்காக பலமுறை கடன் கொடுத்தது.

இந்தியா 2010 மற்றும் 2013 இல் இரண்டு ஹெலிகாப்டர்களையும், 2020 இல் ஒரு சிறிய விமானத்தையும் மாலத்தீவுக்கு பரிசாக வழங்கியது.

இந்த விமானங்கள் நிவாரணம் மற்றும் மீட்புப் பணிகள் மற்றும் மருத்துவ அவசரநிலைகளில் பயன்படுத்தப்படும் என்று இந்தியா கூறியிருந்தது.

2021 ஆம் ஆண்டில், இந்த ஹெலிகாப்டர்கள் மற்றும் விமானங்களை இயக்க சுமார் 75 இந்திய வீரர்கள் மாலத்தீவில் இருப்பதாக மாலத்தீவு பாதுகாப்புப் படையினர் தெரிவித்தனர்.

மாலத்தீவுக்கு இந்தியா ராணுவ தளவாடங்களையும் வழங்கி வருகிறது. மாலத்தீவு கடற்படைக்கு கப்பல் கட்டும் தளம் அமைக்க இந்தியாவும் உதவி வருகிறது. (16ஆம் பக்கம் பார்க்க)

# இலங்கையில் சோழர் ஆட்சிக்குப் பிறகு மீண்டும் பிரமாண்ட ஜல்லிக்கட்டு!

ரஞ்சன் அருண் பிரசாத்



இலங்கையில் தமிழர்களின் பாரம்பரிய விளையாட்டான ஜல்லிக்கட்டு சோழர் ஆட்சிக்குப் பிறகு மீண்டும் பிரம்மாண்டமாக நடத்தப்பட்டது.

திருகோணமலை மாவட்டத்தின் சம்பூர் பகுதியில் ஏறு தழுவுதல் என்ற பெயரில் நடத்தப்பட்டது.

தமிழகத்தின் ஜல்லிக்கட்டு பாதுகாப்பு நலச் சங்க உறுப்பினர்களின் ஒத்துழைப்புடன், இந்தப் போட்டி நடத்தப்பட்டது. இந்தப் போட்டிகளை நடத்துவதற்காக தமிழகத்தில் இருந்து ஜல்லிக்கட்டு வீரர்கள் இலங்கைக்கு வருகை தந்தனர்.

சம்பூர் பொது விளையாட்டு மைதானத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இந்தப் போட்டியில், சுமார் 200 காளை மாடுகள் பங்கு பெற்றன.

இந்தப் போட்டிகளை நடத்துவதற்கான அனைத்து ஏற்பாடுகளையும், கிழக்கு மாகாண ஆளுநர் தலைமையிலான குழு முன்னெடுத்தது.

**இலங்கையில் இதற்கு முன்னர் ஜல்லிக்கட்டு நடந்துள்ளதா?**

இலங்கையை சோழர்கள் ஆட்சி செய்த காலத்தில், ஜல்லிக்கட்டு போட்டி நடத்தப்பட்டுள்ளதாக வரலாற்று சான்றுகளை மேற்கோள் காட்டி ஆளுநர் செந் தில் தொண்டமான் தெரிவிக்கின்றார்.

அதைத் தொடர்ந்து, திருகோணமலை மாவட்டத்தின் சம்பூர் பகுதியில் இந்தப் போட்டி சுமார் 30 ஆண்டுக் காலமாக நடத்தப்பட்டு வந்துள்ளது. சம்பூர் கிராம பகுதிக்குள் நடத்தப்பட்டு வந்த இந்தப் போட்டி தொடர்பில், வெளி பகுதிகளுக்குப் போதிய தெளிவில்லாது இருந்தது.

தமது கிராமத்திற்குள் காணப்படும் காளை மாடுகளைக் கொண்டு, இந்தப் போட்டிகளை சம்பூர் இளைஞர்கள் நடத்தி வந்துள்ளனர். எனினும், இறுதிக் கட்ட யுத்தம் இடம்பெற்ற காலப் பகுதியில் சம்பூர் மக்கள் இடம் பெயர்ந்து, முகாம்களில் வாழ்ந்த காலத்தில் மாத்திரம் இந்தப் போட்டிகளை நடத்த முடியவில்லை என பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர்.

அதைத் தொடர்ந்து, தாம் மீள்குடியமர்த்தப்பட்டதன் பின்னர் மீண்டும் இந்தப் போட்டிகளைத் தாம் நடாத்த ஆரம்பித்ததாகவும் அவர்கள் குறிப்பிடுகின்றனர்.

“தைப் பொங்கலை முன்னிட்டு ஏறு தழுவுதல் போட்டிகளை நடத்துகின்றோம். இந்த நிகழ்வைக் குறைந்தது 30 ஆண்டுகளுக்கு மேல் நடத்திக் கொண்டு வருகிறோம். கடந்த ஐந்து ஆண்டுக் காலமாக இந்தப் போட்டிகள் மிகவும் சிறப்பாக நடைபெற்று வருகின்றது.

யுத்த காலத்தின்போது இந்தப் போட்டிகள் நடைபெறவில்லை. இடம்பெயர்ந்து வாழ்ந்ததன் காரணமாக வெளி ஊர்களில் இந்த நிகழ்வுகளைச் செய்யவில்லை. எனினும், இப்போது ஏற்பாட்டுக் குழு மற்றும் மாட்டு உரிமையாளர்களின் ஒத்துழைப்புடனும், சம்பூர் மக்களின் ஆதரவுடனும் மிகவும் சிறப்பாக நடத்தி வருகின்றோம்,” என ஜல்லிகட்டு போட்டி ஏற்பாட்டு குழுவின் உறுப்பினரான குணராசா ராஜரூபன் தெரிவிக்கின்றார்.

## 57 வயதிலும் காளை அடக்கும் வீரர்

இதுவரை காலம் நடத்தப்பட்ட போட்டிகளில் 50 மாடுகள் வரை பங்கு பெற்றுள்ளன. திருகோணமலையை மாவட்டத்திலுள்ள ஈச்சிலம்பற்று, சம்பூர், 6ஆம் காலனி உள்ளிட்ட பல பகுதிகளைச் சேர்ந்தவர்கள் தமது மாடுகளை போட்டிகளுக்காக அழைத்து வருகின்றனர்.

இதுவரை காலம் எதிர்நோக்கிய சவால்கள் குறித்தும் குணராசா ராஜரூபன் தெளிவூட்டினார்.

“இதுவரை காலமும் வீதியோரங்களிலேயே இந்தப் போட்டிகளை நடத்தி வந்தோம். மைதானங்கள் இருக்கவில்லை. இப்போது மைதானங்கள் இருக்கின்றன.

முன்பு மாடுகளைத் தேடி நாங்கள் சென்றோம். இப்போது மாடுகள் எங்களைத் தேடி வருகின்றன. இந்த நிகழ்வைச் செய்ய வேண்டும் என்ற கோரிக்கையை தமிழ் மக்கள் தொடர்ந்து முன்வைத்து வருகிறார்கள்,” என அவர் கூறுகின்றார்.

ஜல்லிக்கட்டு விளையாடும் நோக்கிலேயே காளை மாடுகளை வாங்கி வளர்த்து வரும், மாட்டின் உரிமையாளர் செல்வநாயகம் யஜீதரன், கருத்து தெரிவித்தார்.

“நாங்கள் இரண்டு மாடுகளை வளர்க்கின்றோம். சுட்டியன், மறையன் என்ற இரண்டு மாடுகளை வளர்த்து வருகின்றேன். இந்த மாடுகள் மூன்று ஆண்டுகளாக விளையாடிக் கொண்டிருக்கின்றன. இந்த இரண்டு மாடுகளும் இன்று வரை ஜெயித்துக்கொண்டுதான் இருக்கின்றன.

இந்த ஆண்டும் நாங்கள் ஜெயிப்போம் என்றுதான் நினைக்கின்றோம். இந்த விளையாட்டை ஆரம்பிக்கும்போது குறைந்ததாட்ச அளவிலான மாடுகளை வைத்தே ஆரம்பித்தோம். அப்போது பொருளாதார ரீதியான பிரச்னைகள்,


யஜீதரன்

சட்ட பிரச்னைகள் இருந்தன.

ஆகையால் தொன்று தொட்டு வீதி வழியாகச் செய்து வந்தோம். இப்போது பிரதேச சபை மைதானத்தில் நடத்துகின்றோம். மூன்று ஆண்டுகளாக பிரச்னை இல்லை. சிறப்பாகச் செய்து வருகின்றோம்,” என மாட்டின் உரிமையாளர் செல்வநாயகம் யஜீதரன் குறிப்பிடுகின்றார்.

தேசிய ரீதியாக இந்த விளையாட்டு முதல் முறையாக நடத்தப்படுகின்ற காரணத்தால், இந்தப் பாரம்பரிய நிகழ்வு சம்பூரில் நடத்தப்படுகின்றமை வெளி உலகத்திற்குத் தெரிய வரும் என்பதை எண்ணி மகிழ்ச்சி அடைவதாகவும் அவர்


செல்வராஜா

கூறுகின்றார்.

ஜல்லிக்கட்டு போட்டிகளில் விளையாடுவதற்காகவே, இரண்டு காளை மாடுகளை வளர்த்து வருகின்றார் சம்பூர் பகுதியைச் சேர்ந்த கணபதிபிள்ளை செல்வராஜா.

“முப்பது ஆண்டுகளாக சிறிய அளவில் நாங்கள் கிராமபுறத்தில் செய்து வந்தோம். 2024 பொங்கலுக்கு கொஞ்சம் நன்றாக, பிரபல்யமாகச் செய்ய நாங்கள் விரும்பினோம். அதனால், போன வருடத்தில் நான் திட்டமிட்டேன்.

இரண்டு மாடுகளை வாங்கி வளர்க்க வேண்டும் என்று நினைத்தேன். எனது காளைகளைப் பிடிக்க விட்டு, அதை வீரர்களால் பிடிக்க முடியாத அளவிற்கு வளர்த்து எடுக்க வேண்டும் என்ற திட்டத்தில் இரண்டு காளைகளை வேண்டி வளர்த்துக்கொண்டிருக்கின்றேன். இந்த ஆண்டும் எனது காளை பங்கேற்கிறது. கட்டாயமாகப் பிடிக்க மாட்டார்கள் என்பது எனது தீர்மானம். வெற்றி எனது மாட்டிற்குத்தான்,” என மாட்டின் உரிமையாளர் கணபதிபிள்ளை செல்வராஜா தெரிவிக்கின்றார்.

சம்பூரில் நடைபெறும் ஜல்லிக்கட்டு போட்டிகளுக்காக வெளி கிராமங்களில் இருந்தும் பெருமளவான காளை


கிருபராசா

மாடுகள் அழைத்து வரப்பட்டுள்ளன.

இந்தப் போட்டிகளில் கலந்து கொள்வதற்காக வெளி கிராமத்தில் இருந்து காளை மாடுகளை அழைத்து வந்த மாட்டின் உரிமையாளர் கிருபராசா, பின்வருமாறு கருத்து தெரிவித்தார்.

“ஜல்லிக்கட்டு போட்டிகளுக்காக மாடுகளைக் கொண்டு வந்திருக்கிறேன். 30 கி.மீ தூரம் நடக்க வைத்தே அழைத்து வந்தோம். ஒவ்வொரு தடவையும் கொண்டு வருவோம்,” என ஈச்சலம்பற்று பகுதியைச் சேர்ந்த கிருபராசா


சுசிலாதேவி

குறிப்பிடுகின்றார்.

“நாங்கள் 2013இல் இருந்து இந்த நிகழ்வில் பங்கு பெற்று வருகிறோம். எங்கட மாட்டைத்தான் ஜல்லிக்கட்டுக்கு கொண்டு செல்வோம். இந்த முறையும் கொண்டு செல்வோம். எனது மாடு நன்கு விளையாடும்,” என மாட்டின் உரிமையாளர் சுசிலாதேவி தெரிவிக்கின்றார்.

சம்பூரில் காளைகளைப் பிடிக்கும் வீரராக செல்வராஜா விஜயகுமார், தனது அனுபவங்களை பிபிசி தமிழுடன்


விஜயகுமார்

பகிர்ந்துகொண்டார்.

“நான் தான் மாடுகளை பிடிப்பேன். மாடு பிடிக்கிறதாக இருந்தால், அது நான்தான். இந்த முறையும் இந்த மாட்டைப் பிடிப்பதற்கு நான் ரெடியாக இருக்கின்றேன்.

எனக்கு இப்போது 57 வயது, குறைந்தது நூற்றுக்கும் மேற்பட்ட மாடுகளை பிடித்திருப்பேன். ஒவ்வொரு வருஷமும்



# மாலைதீவு அதிபர் இந்தியாவை விட்டு....

(14ஆம் பக்கத் தொடர்ச்சி)

இந்தியாவும் சீனாவும் மாலத்தீவில் தங்கள் ஆதிக்கத்தை நிலைநாட்ட முயற்சிப்பதாகத் தெரிகிறது. இந்த தேர்தலில் வெற்றி பெற்றுள்ள முய்சு சீனாவின் பக்கம் சாய்ந்துள்ளதாக நம்பப்படுகிறது.

இந்தியா மற்றும் மாலத்தீவுகள் அறுபது ஆண்டுகளுக்கும் மேலாக ராஜதந்திர, ராணுவ, பொருளாதார மற்றும் கலாச்சார உறவுகளைக் கொண்டுள்ளன.

**மாலத்தீவு பிரச்னையில்**
**இந்தியா VS சீனா**

இந்தியாவுக்கும் மாலத்தீவுக்கும் இடையிலான உறவுகள் 2018 இல் மிகவும் கசப்பானதாக மாறின. இந்த நிலை பிப்ரவரி 1, 2018 அன்று மாலத்தீவு உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்புடன் தொடங்கியது.

மாலத்தீவு அதிபர் அப்துல்லா யாமீன் எதிர்க்கட்சித் தலைவர்களை சிறையில் அடைத்ததன் மூலம் அரசியல் சாசனம் மற்றும் சர்வதேச விதிகளை மீறியதாக மாலத்தீவு உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்திருந்தது. முன்னாள் அதிபர் முகமது நஷீத் உட்பட அனைத்து எதிர்க்கட்சித் தலைவர்களையும் விடுதலை செய்யுமாறு அரசுக்கு நீதிமன்றம் உத்தரவிட்டது.

நீதிமன்றத்தின் இந்த உத்தரவை ஏற்க அதிபர் யாமீன் மறுத்துவிட்டார் என்பதுடன் இதைத் தொடர்ந்து அவர் மாலத்தீவில் அவசரநிலை பிரகடனம் செய்தார்.

இந்த அவசரநிலை 45 நாட்கள் நீடித்தது. இதை இந்தியா எதிர்த்தது. “மாலத்தீவில் அனைத்து அரசியலமைப்பு நிறுவனங்களும் மீட்டெடுக்கப்பட வேண்டும். அவசரநிலை உடனடியாக முடிவுக்கு வர வேண்டும்,” என்று இந்தியா கூறியது.

மாலத்தீவில் ஏற்பட்ட வியத்தகு அரசியல் நெருக்கடி இந்தியா மற்றும் சீனா ஆகிய இரு நாடுகளுக்கும் கவலையளித்தது. இந்த நெருக்கடிக்கு மத்தியில், சீனாவுக்கு நெருக்கமானவராகக் கருதப்படும் அப்துல்லா யாமீன், சீனா, பாகிஸ்தான் மற்றும் சௌதி அரேபியாவுக்கு தனது தூதர்களை அனுப்பியிருந்தார்.

இதையடுத்து, மாலத்தீவின் உள் விவகாரங்களில் எந்த நாடும் தலையிடக் கூடாது என்று எச்சரித்த சீனா, மாலத்தீவின் இறையாண்மையை எந்தச் சூழலிலும் மீறக் கூடாது என்றும் கூறியது.

அதே நேரம், மாலத்தீவு எதிர்க்கட்சித் தலைவர் நஷீத், நீதிமன்றக் காவலில் இருந்து விடுவிக்கப்படுவதற்கு இந்தியாவிடமிருந்து ராணுவத் தலையீட்டை எதிர்பார்த்தார். இதற்கிடையில், சீன செய்தி இணையதளத்தை மேற்கோள் காட்டி செய்தி நிறுவனமான ராய்ட்டர்ஸ், சீன போர்க்கப்பல்கள் மாலத்தீவை நோக்கி நகர்ந்ததாக செய்தி வெளியிட்டது.

இருப்பினும், அந்த ஆண்டு தேர்தல் நடத்தப்பட்டது. அதில் இப்ராகிம் சோலி வெற்றி பெற்றார். அவர் இந்தியாவுக்கு நெருக்கமானவராகக் கருதப்படுகிறார். இருப்பினும், அவரது அரசாங்கம் இந்தியாவிற்கும் சீனாவிற்கும் இடையில் சமநிலையை பராமரிக்க முயன்றது.

மாலத்தீவு இந்தியப் பெருங்கடலில் சுமார் 1,200 தீவுகளைக் கொண்ட ஒரு நாடாகும். அதன் மக்கள் தொகையில் 98 சதவீதம் பேர் சன்னி முஸ்லிம்கள். மாலத்தீவு குடியுரிமைக்கு யாராவது விண்ணப்பித்தால், அவர் முஸ்லிமாக இருப்பது அவசியம்.

மாலத்தீவு வெறும் ஐந்து லட்சத்திற்கும் அதிகமான மக்கள் தொகையைக் கொண்ட ஒரு குடியரசு.

இந்திய மற்றும் சீன நாடுகளின் உத்தி ரீதியிலான பார்வையில் இந்தியப் பெருங்கடலில் ஒரு புவியியல் முக்கியத்துவம் பெற்ற இடத்தில் இருக்கும் இந்த நாடு மிகவும் முக்கியமானது.

மாலத்தீவு நீண்ட காலமாக இந்தியாவிடமிருந்து பொருளாதார மற்றும் ராணுவ உதவிகளைப் பெற்று வருகிறது. ஆனால் வியூக ரீதியாக அதன் புவியியல் இருப்பிடம் காரணமாக சீனாவிற்கு இந்த நாடு மிகவும் முக்கியமானது. ●

# இலங்கையில் சோழர் ஆட்சிக்கு...

(15ஆம் பக்கத் தொடர்ச்சி)

காளையைப் பிடித்து வருகின்றோம்,” என செல்வராஜா விஜயகுமார் தெரிவிக்கின்றார்.

**ஆளுநரின் கருத்து**

இலங்கையில் சோழர்களின் ஆட்சிக் காலத்தில் நடத்தப்பட்ட ஜல்லிக்கட்டு போட்டியை, மீண்டும் ஆரம்பித்துள்ளதாக கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் தெரிவிக்கின்றார்.

“பொதுவாக தமிழ் கலாசாரத்தை உலகளவில் தமிழர்கள் வாழும் பகுதிகளில் அதைப் பாதுகாக்க வேண்டும். அது எல்லா தமிழர்களின் கடமை. அப்படி இருக்கும்போது ஏறு தழுவுதல் போட்டி மாட்டுப் பொங்கல் அன்று தமிழகத்திற்கானது மாத்திரம் அல்ல.



உலகில் யாராக இருந்தாலும் உணவு உட்கொண்டுதான் வாழ வேண்டும். அதற்கு மாடுகள் மிக முக்கியம். அதற்க ாகத்தான் மாட்டுப் பொங்கல் அன்று பொங்கல் வைத்து மாடுகளை வணங்குகிறோம்.

சோழர் காலத்தில் இலங்கையில் இந்தப் போட்டிகள் தொடர்ந்து நடந்துள்ளது. அதன் பின்னரான காலப் பகுதியில் இல்லாமல் போனது,” என்று தெரிவித்தார்.

மேற்கொண்டு பேசிய கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான், ”அந்தப் போட்டிகளைத் திரும்ப ஆரம்பிக்க வேண்டும் என்று பகுதி மக்கள் ஆசைப்பட்டார்கள். அதனால், சோழர்களின் காலப் பகுதியில் நடாத்தப்பட்ட இந்த ஏறு தழுவுதல் போட்டியை மீண்டும் ஆரம்பித்துள்ளோம்.

தமிழகத்தின் ஜல்லிக்கட்டு பாதுகாப்பு நலன்புரி சங்கம் மற்றும் இலங்கையின் சுற்றுலா அதிகார சபையுடன் இணைந்து இந்த நிகழ்வை நடத்துகிறோம். முதல் தடவையாக ஆரம்பித்துள்ளோம்,” எனத் தெரிவிக்கின்றார்.

இந்த நிகழ்விற்கான காளை மாடுகளை எவ்வாறு தெரிவு செய்தீர்கள் என ஆளுநரிடம், கேள்வி எழுப்பியபோது.

“தமிழகத்தில்தான் ஏறு தழுவுதலுக்கான சிறந்த காளைகள் இருக்கிறது. தமிழர்கள் வாழும் பல நாடுகளில் இந்த நிகழ்வு நடத்தப்படுகிறது. அந்த ஊரில் உள்ள காளைகளை வைத்து நடத்துகிறார்கள். அதே மாதிரிதான் இங்குள்ள காளை வைத்து நாங்கள் நடத்துகின்றோம்,” என அவர் கூறினார்.

ஜல்லிக்கட்டு பாதுகாப்பு நலன்புரி சங்கத்தின் தொழில்நுட்ப ரீதியான பயிற்சிகள் இலங்கை வீரர்களுக்கு வழங்கப்பட்டு, அவர்கள் போட்டிகளில் பங்குபெற செய்வதாகவும் கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் தெரிவிக்கின்றார். ●

